



# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 - 1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 9, இதழ் - 4, ஜூலை - ஆகஸ்ட் 2023

R5336

## CHOOSING ELDERS AND DEACONS
## மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல்

சபைகளுக்கான ஊழியக்காரர்களாகிய மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் தேர்வு குறித்து ஆறாம் தொகுதியில் கொடுக்கப்பட்டுள்ள யோசனைகளை பயன்படுத்துவதில் உள்ள சிரமங்களை குறித்த அநேக கேள்விகள் சகோதரரிடமிருந்து நமக்கு வந்திருக்கின்றன.

இந்த காரியத்தைக் குறித்த ஒரு நிலையான சட்டத்தை வைக்க வேண்டும் என்பது எங்கள் எண்ணமல்ல. வேதாகமம் அப்படிப்பட்ட கட்டளை எதையும் கொடுக்கவில்லை. அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை வைக்க யாருக்கும் உரிமையில்லை. கூடுமானால் இந்த தேர்ந்தெடுத்தலானது ஏகமனதாக இருக்க வேண்டும் என்பதும், ஒரு சகோதரனுக்கு 75% அல்லது அதற்கும் அதிகமான பேர் ஆதரவு கொடுக்காத பட்சத்தில் அந்த சகோதரன் அந்த பதவியை ஏற்றுக்கொள்ளுவது ஞானமானதாக இருக்காது என்பதும் எங்களது கருத்தாக இருந்தது. இதனிமித்தம் சிறுபான்மையினரான 25 அல்லது 30% சபையை தடங்கல் செய்யவும் தேர்ந்தெடுத்தலை தடை பண்ணவும் தைரியமூட்டப்பட வேண்டும் என்பது அதன் பொருளாகாது.

சரியாக சொல்ல வேண்டுமென்றால், அன்பானது மற்றவர்களின் உணர்வுகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்கிற தருணங்களைத் தவிர, அதிகப்படியான ஒரு வாக்கே பெரும்பான்மையை நிரூபிக்க போதுமானதாக இருக்கிறது. உதாரணத்திற்கு நூறு பேர் கொண்ட சபையில், 51பேர் சபையின் ஊழியக்காரனை தேர்ந்தெடுக்க போதுமானவர்களாக இருக்கிறார்கள். மற்ற 49பேர் அவர்கள் சிறுபான்மையாக இருப்பதால், பெரும்பான்மையானவர்களின் விருப்பத்தை ஆதரிக்க முயற்சி செய்ய வேண்டும்.

அன்பின் ஆவியும் சபையைப் பற்றியும் அனைவரின் அக்கறையும் 51% யோசனை கூறுகிறது. அன்பானது ஒரு மனதாக தேர்வுக்கு முயற்சி செய்ய வேண்டும். ஆனால் இதை எப்படி பெற வேண்டும்? நாங்கள் ஒரு யோசனையை வைக்கிறோம்.

A,B,C,D,E,F என்ற ஆறு பேர் தகுதியுள்ளவர்களாக இருந்தால், A நூறு ஓட்டும், B 90 ஓட்டும், 80 ஓட்டும், 70 ஓட்டும், 60 ஓட்டும், 50 ஓட்டும் பெற்றால் 90 ஓட்டிற்கு மேல் பெற்ற இரண்டு பேர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எங்களது யோசனை என்னவென்றால் அவர்கள் திறமைசாலிகளாகவும் நல்ல குணலட்சணமுடையவர் -களாகவும் இருந்தால் இழிவான குணம் இல்லாதிருந்தால் ஆறு பேருமே ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்படலாம்.

பரிசுத்த பவுல் சொன்ன தகுதிகளை நாம் சொல்லர்த்தமாக எடுத்துக்கொண்டால் எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடியவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். அப்போஸ்தலர் சீர்மிகு மூப்பர் எப்படி இருக்க வேண்டும் என்று கூறுகிறார். கர்த்தருடைய சித்தத்தை சிந்திப்பதில் ஓட்டளிப்பவர் இந்த சீர்மையை மனதில் கொள்ள வேண்டும். தீவிரமான குற்றம் சாட்டப்பட்டவர் இருந்தால் ஒழிய சபையானது ஒரு மூப்பர் இல்லாமல் விடப்படக்கூடாது.

அதேபோல் நமது கர்த்தர் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராக இருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராக இருக்கக்கடவீர்கள் என்று கூறி நமக்கு முன் ஒரு பூரண திட்ட அளவை வைக்கிறார். (மத்தேயு 5:48) தேவன் பூரணராயிருக்கிறது போல யார் பூரணராயிருக்கிறார்? "நீதிமான் இல்லை, ஒருவனாகிலும் இல்லை." (ரோமர் 3:10) நாம் நம்மை குறைவான திட்ட அளவுடன் ஒப்பிட்டு அளவிடாமல், பூரண அளவுடன் ஒப்பிட்டு மதிப்பிட வேண்டும் என்ற பொருளில் ஆண்டவர் கூறியுள்ளார். இதன் மூலம் நமது சொந்த ஜீவியங்கள் மற்றும் குணலட்சணங்களிலும் இன்னும் மூப்பர்களாகவும் மந்தைக்கு மாதிரிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் விஷயங்களிலும் நமக்கே உதவி புரிகிறவர்களாக இருப்போம்.

முழு அர்ப்பணம் செய்து அதை தண்ணீர் முழுக்கு என்ற அடையாளத்தினால் வெளிப்படுத்தினவர்கள் தவிர வேறு யாரும் ஓட்டளிக்கக்கூடாது என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். இப்படி தங்களது அர்ப்பணத்தை அடையாளப்படுத்தி; காண்பிக்காதவர்கள் சகோதரர்கள் அல்ல என்று மறுக்கப்படக்கூடாது. மாறாக அவர்கள் இன்னும் வளர்ச்சியடையவில்லை என்றும், சபையில் ஊழியம் செய்ய தகுதியுள்ளவர்கள் யார் என்பதை வெளிப்படுத்தவும், தாங்களே சபைக்கு ஊழியம் செய்யவும் தகுதியற்றவர்கள் என்றும் கருதப்பட வேண்டும்.

இங்கும் அங்குமாக எழும்பி ஊடுருவும் இன்னொரு கேள்வி என்னவென்றால், எல்லாருக்கும் பரிந்துரைக்கப்பட்டதும் நம்மில் அநேகருக்கு மிகவும் பிரயோஜனமானது என்றும் காணப்படுகிற விசேஷித்த வாக்குறுதியை சகோதரத்துவத்துக்கான பரீட்சையாக நாம் ஆக்கமுடியாது. வேதமும் அதை சகோதரத்துவத்துக்கான பரீட்சையாக்க நமக்கு அதிகாரமளிக்கவில்லை. இது தெய்வீக கட்டளையாக இல்லாமல் தீர்மானிக்கக்கூடிய காரியமாக இருக்கிறது. மூப்பருக்கான தகுதியாக இது வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை. இது ஆங்கில மொழியை தவறாக பயன்படுத்துவது போலவும், அருவருப்பான முறையில் கவனிக்கப்படுவது போலவும் இருக்கக்கூடாது.

எங்குமுள்ள கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் உள்ள பிரியமுள்ள மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் அனைவரும், வாக்குறுதி நியாயமானது என்றும் அது தெய்வீக வார்த்தைகளுடனும் நமது அர்ப்பணிப்பின்போது வாக்குறுதியுடனும், இசைவாக இருப்பதையும் அது

இளநீல தொங்கலாக இருக்கிறது என்பதையும் காண்பார்களானால் அதினிமித்தம் நாம் மிகவும் களிகூருகிறோம். அந்த வாக்குறுதிக்கு ஒரு கிறிஸ்தவ சகோதரன் அல்லது சகோதரி மறுப்பு தெரிவிக்கக்கூடும் என்று யோசிக்காமல் இருக்கக்கூடாது. இது நம்மில் சிலருக்கு அவர்களது இருதயத்தின் நோக்கங்களில் ஏதேனும் குறைபாடு காணக்கூடும் அல்லது புரிந்து கொள்ளுதலில் ஏதாவது தவறு இருக்கக்கூடும் என்று காணப்படுகிறது. எனினும் நாம் சரியானபடி நியாயந்தீர்க்க திறமையுள்ளவர்கள் அல்ல. மற்றவர்களை குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள் என்று ஆண்டவர் சொன்னார்.

வாக்குறுதியை எடுத்தவர்களுக்கும், அது குறித்த ஒருமித்த கருத்துடையவர்களுக்கும் மூப்பர்கள் அல்லது உதவிக்காரர்கள் என்ற பதவிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படலாம் என்பது எங்களது கருத்தாக இருக்கிறது. சபையை நடத்துவதற்கு திறமை மிக்க சகோதரர்களும் வாக்குறுதியை எதிர்க்காதவர்களாகவும் இருப்பார்களானால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம். இப்படியாக தங்களால் முடிந்தவரை வாக்குறுதிகளின் தேவைகளின்படி தாங்கள் வாழ்வதாகவும், இந்த வாக்குறுதியை எடுத்தால் தங்களுக்கோ மற்றவர்களுக்கோ தீமை விளைவிக்கும் என்று எண்ணி அதை எடுக்காமல் இருப்பவர்களுக்கு அது உண்மையாக இருக்கலாம். அவர்களது மனப்பாங்கையோ, அவர்களது நியாயப்படுத்தும் முறைகளையோ புரிந்து கொள்ளாமலிருந்தால், நம்மால் புரிந்துகொள்ள முடியாததையும் உணர்ந்து கொள்ள முடியாததையும் நாம் கடந்து போகலாம்.

**R5341**

## OUR CUP OF BLESSING

# நமது ஆசீர்வாதத்தின் பாத்திரம்

“நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லோரும் பங்கு பெறுகிறபடியால்.அநேகரான நாம் ஒரே அப்பமும், ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.” – 1கொரிந்தியர் 10:16,17

“நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம்” என்பது உண்மையிலேயே அநேக விதங்களில் ஆசீர்வாதத்தின் பாத்திரமாக இருக்கிறது. இது இயேசுவோடு பாடுபடுகிற ஆசீர்வாதமான சலுகையை குறிக்கிறது. இந்த பாடுகளினால் வரக்கூடிய பரிசாகிய ஆசீர்வாதமான காரியங்களைக் குறிக்கிறது. ராஜ்யத்தின் சந்தோஷங்களில் பங்கு பெறும் போது இந்த வாக்குத்தத்தம் ராஜ்யத்தில் நிறைவேறும் என்று கர்த்தர் அறிவிக்கிறார்.

“இயேசு, நானே திராட்சை செடி நீங்கள் கொடிகள்” (யோவான் 15:5) என்று கூறியதுபோல சபையானது தேவன் நட்டிருக்கிற திராட்சை செடியின் ஒரு பாகமாக குறிப்பிடப்படுகிறது. நமது கர்த்தர் நம்மை இந்த திராட்சை செடியின் விலையேறப்பெற்ற பழமாக கூறுகிறார். அதன் அபிவிருத்தி நமது அனுபவங்களின் வருத்தமான பகுதியை குறிப்பிடுகிறது. இந்த தற்கால பாடுகளைக் கடந்து, மகிமைக்குள் நுழைந்திருக்கும் போது பாத்திரமானது சந்தோஷத்திற்குரியதாக இருக்கும் என்று பொருள் இருக்கிறது. (மத்தேயு 26:29) “நாம் ஆசீர்வதிக்கிற” என்ற சொற்றொடர் நாம் கர்த்தருக்கு நன்றியும் ஸ்தோத்திரமும் கூறுவதை அர்த்தப்படுத்தும் என்று புரிந்து கொள்ளப்பட வேண்டும். இருதயத்தில் நன்றியுடனும் பாராட்டுதலுடனும் பாத்திரத்தை பெறாதவர்கள் மாபெரும் பரிசை பெறமாட்டார்கள். திட்டமிட்டிருக்கிற ஆசீர்வாதத்தை பெறுவதற்கு, பாத்திரத்தை நாம் கிறிஸ்துவுடன் பாடுகளுக்கான இந்த மாபெரும் சலுகைக்காக நன்றியுடன் நாம் பெற வேண்டும்.

“கிறிஸ்துவின் இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிற தல்லவா?” என்கிற அப்போஸ்தலரின் கேள்வியை கவனிக்கும் போது நமது சிந்தைகளில் இரண்டு எண்ணங்கள் வரவேண்டும். முதலாவது, அவர் குறிப்பிடுகிற சொல்லர்த்தமான பாத்திரம், இயேசுவின் இரத்தத்தை குறிப்பிடுகிற சொல்லார்த்தமான திராட்சை ரசம். இரண்டாவது, பலியின் பாத்திரமாகிய அவரது பாத்திரத்தில் பங்கு பெறுகிற சலுகையை நாம் பெற்றிருக்கிறோம் என்கிற உண்மை. அவரது மரணத்தில், அவரது பாடுகளில் பங்கு பெறும் சிலாக்கியத்தை பெற்றிருக்கிறோம். இயேசு கிறிஸ்து அவரது சரீரமாக இருக்கக்கூடிய சபைக்கு தலையாக இருக்கிறார் என்கிற இந்த கருத்து மற்ற வேத வாக்கியங்களிலிருந்து பிறந்தது. அவர் மாபெரும் தீர்க்கதரிசியாக, ஆசாரியராக, ராஜாவாக, நியாயாதிபதியாக மற்றும் உலகை ஆசீர்வதிப்பவராக இருக்க வேண்டும்.

வேதவாக்கியங்களின்படி மாபெரும் தலையானவர் மரண பரியந்தம் பாடுகளை சகித்த பிறகு, உலகத்திற்காக ஜீவனை கொடுத்த பிறகு மகிமைப்படுத்தப்பட்டார். இப்பொழுது மாம்சத்தில் இருக்கிற நம்மை அவரது அங்கங்களாக, சீக்கிரத்தில் மகிமையில் அவரது அங்கங்களாகும்படி அவர் நம்மை ஏற்றுக் கொண்டிருக்கிறார். பார்லிமெண்ட் சபையின் அங்கங்களை பற்றி பேசுகிறோமே அதுபோல அங்கம் என்ற வார்த்தையை நாம் பயன்படுத்துகிறோம். பார்லிமெண்ட் சபை பல அங்கங்களை பெற்றிருக்கிறதைப் போல, கிறிஸ்துவின் சரீரமும் பல அங்கங்களை உடையதாக இருக்கிறது. அவர்கள் தங்களது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்துவதற்கு அவர்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, தேவனிடத்தில் தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும். பிறகு நமது கர்த்தர் அவர்களை தமது அங்கங்களாக, இப்போது பூமியில் அங்கங்களாக பிறகு மகிமையில் அவரது அங்கங்களாக ஏற்றுக்கொள்ளுவார்.

### “நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்”

விசுவாசத்துடன் இந்த பாத்திரத்தில் (மத்தேயு 26:27) பானம் பண்ணுகிறோம் என்ற நிபந்தனையின்படி “நாம் நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்துவோம்.” (2பேதுரு 1:10) “நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்” என்கிற கட்டளை இரண்டு வித முக்கியத்துவம் உடையதாக இருக்கிறது. முதலாவது, எல்லாரும் இதை சுவிசேஷயுக முடிவுக்கு முன் குடிக்க வேண்டும். இரண்டாவது, கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாயிருக்கிற அனைவரும் இதைக் குடிக்க வேண்டும். தலையும் சரீரமும் சேர்ந்த முழு கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றி பரிசுத்த பேதுரு பேசினார். இது கடந்த பதினெட்டு நூற்றாண்டுகளாக (தற்போது பத்தொன்பது நூற்றாண்டுகளாக) நடந்துகொண்டு வருகிறது. அதன்பிறகு மகிமை பின் தொடரும். (1பேதுரு 1:8-12; 4:1; 5:1) கடைசி அங்கம் பரலோக நிலைமைக்கு கடந்து சென்ற

பிறகு முழு கிறிஸ்துவின் பாடுகளும் முடிவு பெறும். அதன் பிறகு யாரும் "கிறிஸ்துவின் பாடுகளில்" பங்கு பெறும் சலுகையை பெற மாட்டார்கள். அவரது மகிமையில் பங்கு பெறும் சிலாக்கியத்தையும், "ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக, மணவாட்டியாக" ஆகக்கூடிய சிலாக்கியத்தையும் யாரும் பெற மாட்டார்கள்.

அது பல திராட்சை பழங்களை உடையதாக இருந்தாலும் ஒரே பாத்திரம் தான்; அநேக கோதுமை மணிகள் உடையதாக இருந்தாலும் அது ஒரே அப்பம் தான். அவர்கள் உலகத்தின் அப்பமாக மாறினால், கோதுமை மணிகள் தங்கள் தனித்தன்மையும் ஜீவனையும் வைத்துக்கொள்ள முடியாது. திராட்சை பழங்கள் ஜீவனை அளிக்கும் ஆவியாக மாறின பிறகு, திராட்சை பழங்கள் தங்கள் தனித்தன்மையை வைத்துக்கொள்ள முடியாது. கர்த்தரின் ஜனங்கள் ஒரே அப்பத்திலும் ஒரே பாத்திரத்திலும் பங்கு பெறுகிறார்கள் என்கிற அப்போஸ்தலரின் அறிக்கையின் அழகை இப்படியாக நாம் பார்க்கிறோம். கர்த்தரின் பாத்திரத்தில் பங்கு பெறவும் ஒரே அப்பத்தின் அங்கங்களாக அவரோடு மீட்கப்படவும் அவரது அழைப்பை ஏற்றுக்கொள்வதை தவிர புது சுபாவத்தை பெறுவதற்கு நமக்கு வேறு வழியில்லை. மரணத்திற்குள்ளான அவரது ஞானஸ்நானத்தில் அவரோடு கூட அடக்கம் பண்ணப்படவும் இப்படியாக அவரோடு கூட முதலாம் உயிர்த்தெழுதலில் கனம், மகிமை மற்றும் சாகாமையை பெற அவரோடு கூட உயிர்த்தெழவும் நமக்கு வேறு வழியில்லை.

## ஒரே அப்பத்தில் சபையின் பங்கு

அப்பமானது முதல்நிலையில் நமக்காகவும் பொதுவாக உலகத்திற்காகவும் பிட்கப்படுகிற நமது கர்த்தரின் சரீரத்தை குறிக்கிறது. இது பரந்த உணர்வில் கிறிஸ்துவின் அங்கங்களாகக் கூடிய சகலரையும் அவரது சரீரத்தில் உள்ளடக்குகிறது. இப்படியாக அப்பத்தை பிட்பது, சரீரத்தை பிட்பது கடந்த பத்தொன்பது நூற்றாண்டுகளாக தொடர்ந்து கொண்டிருக்கிறது.

கர்த்தரின் இராப்போஜனம் ஏற்படுத்தப்படும் போது இயேசு அப்பத்தை பிட்டார் என்று நாம் வாசிக்கிறோம். உண்மையிலேயே அப்பத்தை பிட்கக்கூடியவர் அந்த சமயத்தில் அவர் ஒருவர் மட்டுமே இருந்தார். மனுக்குலத்தில் மற்ற அனைவரும், இயேசு தமது பலி மற்றும் உயர்த்தப்பட்டதினால் ஒரு குறிப்பிட்ட வகுப்பாரின் குறையை நல்லதாக ஆக்கும்வரை தேவனுடைய பார்வையில் அநீதிமான்களாகவே இருந்தனர். ஆகையால் இயேசு மாத்திரமே முதலாவது அப்பத்தை பிட்கிறவராக இருந்தார். இன்றைக்கு நினைவு கூருதலின் காலத்தில் புளிப்பில்லா அப்பமாக அது ஒவ்வொருவரிடமும் வரும் போது,அதில் ஒரு பாகத்தை எடுத்து ஒவ்வொருவரும் தாங்களே பிட்டுக்கொள்ளுகிறார்கள்.

நமது கர்த்தர் முதலாவது அப்பத்தை பிட்டார் என்ற உண்மை நாம் நமது தனிப்பட்ட பங்கை பெற்றிருக்கக்கூடாது என்று பொருள் படாது. பரமபிதா நமது கர்த்தரின் சரீரத்தை பிட்க வேண்டியவராக இருந்தார் என்பதை நாம் நினைவு கூருகிறோம். எழுதப்பட்டிருப்பதாவது: "கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரை பாடுகளுக்குட்படுத்தினார்." (ஏசாயா 53:10) இது நமது கர்த்தரின் சித்தத்துக்கு விரோதமாக செய்யப்படவில்லை. பரம பிதா, தெய்வீக ஏற்பாடுகளுக்கு இசைவாக அவரது பிட்குதலை செய்யவிருந்த போது, அப்பத்தின் நமது பங்கும் பிட்கப்பட்டது.

அடுத்த அதிகாரத்தில் அப்போஸ்தலரின் அறிக்கையாகிய "நீங்கள் கர்த்தரின் மரணத்தை தெரிவிக்கிறீர்கள்" என்பது பிரத்தியேகமாக கர்த்தரின் மரணத்திற்கே பொருந்தும். பொருத்தப்பட்டிருக்கிற வார்த்தைகள் தனிப்பட்ட முறையில் கர்த்தராகிய இயேசுவையே குறிப்பிடுகின்றன. "நீங்கள் இந்த அப்பத்தை புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்." (1கொரிந்தியர் 11:26) "அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரை பணிந்து கொள்." (சங்கீதம் 45:11) சபையானது கர்த்தராக எப்பொழுதுமே சொல்லப்படவேயில்லை.

மேலும், "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று இயேசு கூறியதை நாம் நினைவுகூர வேண்டும். அவர் இதை, உங்களை நினைவுகூரும்படி செய்யுங்கள் என்றோ, பலியில் உங்கள் பங்கை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றோ அவர் கூறவில்லை. நாம் அவருடன் மரித்தவர்களாக இருக்க வேண்டும். வரக்கூடிய மகிமையில் நாம் பங்கு பெற வேண்டும் என்றால், தற்கால பாடுகளில் நாம் பங்கு பெற வேண்டும் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். பிதா அவரை தலையாயிருக்கும்படி தந்தருளினார். "தேவன் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்." (எபிரேயர் 3:1; ரோமர் 8:17, 18; 9:5)

## உயிர் இரத்தத்தில் இருக்கிறது

உயிர் இரத்தத்தில் இருக்கிறது என்று வேதவாக்கியம் கூறுகின்றது. (லேவியராகமம் 17:11) இந்த கூற்றுக்கு இசைவாக, யூதர்கள் இரத்தத்தை புசிக்க எப்பொழுதும் விலக்கப்பட்டிருந்தனர். மிருகத்தின் மாம்சத்தை புசிக்கும் முன்பு அதன் இரத்தம் சிந்தப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் நடுவே தங்குகிற அந்நியனும் இரத்தம் புசிக்கலாகாது. (லேவியராகமம் 17:10-14) இந்த வழியில் உயிரானது மிகவும் புனிதமானது என்று சொன்னதாக தெரிகிறது. தேவன் மனிதனுக்கு கொடுத்த ஜீவன் இரத்தத்தில் இருப்பதாக காணப்படுகிறது. இரத்தமானது உறுப்புகளில் ஓடும்போது உயிர் அங்கே இருக்கிறது; ஆனால் இரத்தம் சிந்தப்படும் போது அந்த ஜீவி மரிக்கிறது.

நமது கர்த்தர் தமது பூமிக்குரிய ஜீவனை கொடுத்த பொழுது, தமக்கு அதை பயன்படுத்த வேண்டும் என்ற பொருளில் பூமிக்குரிய ஜீவனின் உரிமையை தக்க வைத்து கொள்ளவில்லை. "விலையுயர்ந்த முத்தை" (மத்தேயு 13:45, 46) பெறுகிறவன் தனக்குண்டான எல்லாவற்றையும் விற்கிறான் என்று அவர் நமக்கு உவமையில் கூறுகிறார். அதாவது பூமிக்குரிய வாழ்வில் அனுபவிக்கிற சகல நன்மைகளையும் விற்க வேண்டும். நமது கர்த்தர் ஒரு பரிபூரண பூமிக்குரிய ஜீவனை பெற்றிருந்தார். அந்த ஜீவனை கொடுத்து விட்டார். "அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றினார்." (ஏசாயா 53:12) எதன் அடிப்படையில்? அவர் நமக்கு முன் வைத்திருக்கிற அதே அடிப்படையில். நாம் ஜீவிக்க வேண்டும் என்றால் நாம் மரிக்க வேண்டும்; நாம் ஆளுகை செய்ய வேண்டும் என்றால் நாம் பாடுபட வேண்டும்; நாம் அவருடன் மரிக்க வேண்டும். (2தீமோத்தேயு 2:11;12) ஆகையால் அவரது அடிச்சுவட்டில் நடக்கிற நாம் அவர் செய்தபடியே நாமும் செய்ய வேண்டும்.

அவருடைய சீஷர்களாக நமது ஜீவனை நமது சகோதரர்களுக்காக கொடுத்தோமானால், இயேசு செய்ததையே நாமும் செய்கிறோம். இவையெல்லாம் உலகத்திலுள்ள அனைவருக்கும் கொடுக்கப்படும். அவர் பூமிக்குரிய ஜீவனை எடுத்தது, அதை வைத்துக்கொள்வதற்கு அல்ல, முடிவாக அதை அனைத்து மனுக்குலத்திற்கும் கொடுப்பதற்காகவே ஆகும். மானிட ஜீவனுக்குரிய உரிமை இன்னும் அவரது கட்டுப்பாட்டில் உள்ளது. மாபெரும் மத்தியஸ்தராக அவர் ஊற்றின ஜீவனை உலகிற்கு கொடுப்பவர் அவரே.

நாம் அவரது பாடுகளில் அவருடன் பங்குபெறவும் அவருடைய மகிமையான ராஜ்யத்தில் ஆவியின் சுபாவத்தில் பங்கு பெறவும் அவர் தமது புண்ணியங்களை இப்போது சபைக்கு சாட்டுகிறார். பிறகு இந்த பாத்திரம் பூமிக்குரிய ஜீவனையும் அதற்கான சகல உரிமைகளையும் துறப்பதை குறிக்கிறது. நமது கர்த்தரின் பூமிக்குரிய ஜீவன் பறிமுதல் செய்யப்படவில்லை, ஆனால் கொடுக்கப்பட்டது. (யோவான் 10:17.18) அதைக் கொடுப்பதற்கான நோக்கம், மனுக்குலம் பெற்றுக்கொள்ளும்படியாக அதை என்றென்றைக்குமாக விட்டு விடுவதாகும். இதை அவர் இன்னும் நிறைவேற்றவில்லை. அதாவது அவர்கள் ஜீவனை அடையும்படிக்கு அது இன்னும் உலகிற்கு கொடுக்கப்படவில்லை. ஆனால் இந்த நோக்கத்திற்காகவே அவர் தனது ஜீவனை கொடுத்திருக்கிறார்.

### பறிமுதல் செய்யப்படாத பூமிக்குரிய ஜீவாதார உரிமை

உலக இரட்சிப்பில் தெய்வீக சித்தத்தை நிறைவேற்ற நமது கர்த்தர் ஏற்றுக்கொண்டார். அதை நிறைவேற்ற அதைத் தொடர்ந்து செயல்படுகிறார். ஆனால் ;இன்னும் அந்த நோக்கத்தை நிறைவேற்றவில்லை. அவர் தமது ஜீவனை கொடுத்தார், ஆனால் அது பறிமுதல் செய்யப்படவில்லை. அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்ட பொழுது பூமிக்குரிய ஜீவாதார உரிமையைப் பெற்றிருந்தார். ஆனால் அதை அவர் தமது சொந்த பயன் பாட்டுக்கு பயன்படுத்தக்கூடாது என்ற புரிதலுடன் ஆகும். சபையானது அவருடன் ஆளுகை செய்யும் அவரது ஆயிரம் வருட யுக முடிவில் பெற்றுக்கொள்ள விருப்பம் உள்ள உலகத்தார் அனைவருக்கும் ஜீவனை தந்தருளுவார்.

ஆகையால் அவரது ஜீவன் அவரிடமிருந்து எடுக்கப்படவில்லை. ஏனெனில் அவரது கீழ்ப்படியாமையினால் மட்டுமே அவரது ஜீவன் எடுத்துக்கொள்ளப்பட முடியும். (லேவியராகமம் 18:5; எசேக்கியல் 20:11; லூக்கா 11:28; ரோமர் 10:5) அதை தெய்வீக சித்தத்துக்கு இசைவாக தாமே மனமுவந்து கொடுத்தார். அது நீதியின் கைகளில் ஒரு சொத்தாக இருக்கும்படி கொடுத்திருக்கிறார். அதன் மூலம் அந்த சொத்தை காலம் வரும் போது மனுக்குலத்திற்கு பயன்படுத்தலாம். (யோவான் 6:51)

நமது கர்த்தரின் மானிட ஜீவன், திரும்ப எடுத்துக்கொள்ள முடியாதபடி நித்தியமாக அதைக் கொடுக்க வேண்டும் என்பதே தெய்வீக சித்தமாக ஆதியில் இருந்தது. அவர் தமது ஜீவனை யோர்தானில் அர்ப்பணித்து, பலியை கல்வாரியில் முடித்தார். சுவிசேஷயுகம் முழுவதும் அவரது விசித்திரமான சரீரத்தை பலி கொடுத்து வந்தார். இந்த அனைத்து சரீர அங்கங்களின் பலியை முடித்தவுடனேயே மகா பிரதான ஆசாரியருக்கு சொந்தமான அவர்களது ஜீவ உரிமை, புது உடன்படிக்கையை முத்திரையிட்டு உலகத்தின் இரட்சிப்புக்காக விலைக்கிரயமாக வாங்குவதற்கு பயன்படுத்தப்படும். இதன் பிறகு உடனே அவரது ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். அவரது புண்ணியத்தை, அவரது ஜீவாதார உரிமையை பயன்படுத்துவது, முழு சபையும் திரைக்குப்பின்னால் செல்லும் வரை நடைபெறாது. அது ஆட்டின் இரத்தம் கிருபாசனத்தில் தெளிக்கப்படுவதின் மூலம் அடையாளப்படுத்தப்படுகிறது. நமது கர்த்தரின் இரத்தமும் அவரது சரீரத்தின் இரத்தமும் ஒன்றுதான். அது அநேக அங்கங்கள் அடங்கிய ஒரே ஆசாரியர். அது எல்லாருக்குமான ஒரே பாவ நிவாரணம், முழு உலகத்தின் பாவங்களுக்கான நிவாரணம். (1யோவான் 2:2)

இரத்தமானது கிறிஸ்துவின் மரணத்தை மட்டும் குறிக்காமல், அவரது புண்ணியம் சாட்டப்பட்ட அவரது சரீரத்தின் சகல அங்கங்களின் மரணத்தையும் குறிக்கிறது. இதே இணைப்பிலேயே அப்போஸ்தலரின் கூற்றும் இருக்கிறது. “நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாக இருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாக இருக்கிறதல்லவா?” அதாவது ஐக்கியம் அவருடன் பொதுவாக இருக்கிறது; பாத்திரத்திலும் அப்பத்திலும் ஒரு பங்காக இருக்கிறது. முழு காரியமும் ஆரம்பத்தை அவரிலேயே பெற்றிருக்கிறது. ஆனால் மாம்சத்தின் பலியில், கிறிஸ்துவின் பாடுகளில் நமது பங்கிலும் சபையின் அங்கங்களாக நமது தனிப்பட்ட பங்கை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

**R5342**

### SIGNIFICANCE OF EATING OUR LORD'S FLESH AND DRINKIG HIS BLOOD

# கர்த்தருடைய மாம்சத்தை புசிப்பதிலும் அவருடைய இரத்தத்தை பானம் பண்ணுவதிலும் உள்ள முக்கியத்துவம்

“மனுஷ குமாரனுடைய மாம்சத்தை புசியாமலும். அவருடைய இரத்தத்தை பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை.” – யோவான் 6:53

இந்த அதிகாரத்தில் கர்த்தர் தம்மை பரலோகத்திலிருந்து வந்த மெய்யான அப்பம் என்று கூறினதினிமித்தம் அவரை விசுவாசியாமல் முறுமுறுத்த யூதர்களை நோக்கி பேசுகிறார். மாம்சத்தை புசித்து இரத்தத்தை பானம்பண்ணுங்கள் என்ற அவரது கூற்று ஆழ்ந்த ஆவிக்குரிய பொருளுடையதாகவும். உத்தம இஸ்ரயேலர்களைத் தவிர வேறு யாரும் ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் இருந்தது. இது இன்றைக்கும் கூட கையாளப்படும் போது, அவரது மாம்சத்தை புசிக்க. அதாவது அவரது பலியின் புண்ணியத்தை உபயோகித்துக்கொள்ள உண்மையாகவே சந்தர்ப்பத்தை பெறும். ஆனால் அவர்கள அவரது பாத்திரத்தில் பங்குபெற, அவரது இரத்தத்தை பானம் பண்ண சந்தர்ப்பம் கிடைக்காது. பாத்திரமானது அவரது பலியின் ஜீவியத்தை குறிக்கிறது. பாத்திரத்தினால் அடையாளப்படுத்தப்படுகிற கிறிஸ்துவின் பாடுகளில் உலகமானது பங்கு பெறாது.

நமது கர்த்தருடைய வார்த்தை சுட்டிக்காட்டுவது என்னவென்றால், சுவிசேஷ யுகத்தின் என்னுடைய போதனைகளை நீ ஏற்றுக்கொண்டால் நீ ஜீவனை பெற்றுக்கொள்ளுவாய். இதுவரை யாரும்பெற்றிராத அல்லது பெறக்கூடியதைக் காட்டிலும் அதிகமாக பெறுவாய் என்பதாகும். ஜீவனை, “உனக்குள் ஜீவனை” நீ சுதந்தரித்துக்கொள்ளலாம்.

## இரண்டு இரட்சிப்புகள் சித்தரிக்கப்பட்டுள்ளன

கர்த்தருடைய மாம்சத்தை அடையாளப்படுத்தும் அப்பத்திற்கும் அவரது இரத்தத்தை அடையாளப்படுத்துகிற திராட்சைரசத்திற்கும் இடையே வித்தியாசம் வேத வாக்கியத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று நாம் நம்புகிறோம். சபையானது கர்த்தரின் மகிமையடைந்த சரீரத்தின் அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு இந்த இரண்டிலும் அவர்கள் பங்கு பெற வேண்டும். அப்பமானது அப்போஸ்தலர் விவரிப்பது போல, நமது கர்த்தரை மாத்திரம் அடையாளப்படுத்துகிறதாய் இராமல், நமக்கு தேவைப்படுகிற ஜீவ அப்பமாகவும் இருக்கிறார். ஆனால் அது நமது கர்த்தர் பிட்கப்பட்டது போல, நாமும் அவரது அங்கங்களாக பிட்கப்பட வேண்டும் என்பதையும் குறிக்கிறது. மேலும் திராட்சை ரசமானது நமது கர்த்தரின் இரத்தத்தை மாத்திரமல்ல, அவரது பலியின் பாடுகளில் பங்கு பெறுகிற சபையின் இரத்தத்தையும் குறிக்கிறது. (1 கொரிந்தியர் 10:16,17)

நமது கர்த்தரின் பாத்திரத்தில் பங்குபெறும் சலுகை உலகத்திற்குரியதல்ல. அவர்கள் கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு பெற மாட்டார்கள். ஏனெனில் அவரது பாடுகளிலும் மகிமையிலும் பங்குபெறும் சகல சலுகைகளும் சபை மகிமையடைவதோடு முடிவடைந்துவிடும். "நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்." முழுவதையும் பானம் பண்ணுங்கள் என்று கர்த்தர் கூறினார். உலகமானது பானம் பண்ண எதுவுமிராது. மேலும் சபை வகுப்பாரகிய நாம் "கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை (விடப்பட்டதை) நிறைவேற்றுகிறோம்." (கொலோசெயர் 1:24)

"மனுஷகுமாரனுடைய மாம்சமானது" மனித சலுகைகளை திரும்பக் கொடுப்பதை குறிக்கிறது. அதாவது அதை அடைவதற்கான வழிவகைகளைக் குறிக்கிறது. மனிதன் இழந்த போன, ஆதாமில் இழந்துபோன மானிட ஜீவனை, பூமிக்குரிய ஜீவனை திரும்பப் பெறுவதைக் குறிக்கிறது. அது கிறிஸ்து மூலம் வருகிற தேவனுடைய ஈவாக இருக்கிறது. ஆனால் இந்த அப்பத்தை வழங்குவது போதுமானதாக இருக்காது. உலகம் அப்பத்தை புசிப்பதும் கர்த்தரின் ராஜ்யத்தின் மூலம் அவர் அவர்களுக்கு அளிக்கும் உதவியை பெறுவதும் அவசியமானது. இயேசு கூறினதாவது: "நானே வானத்திலிருந்து இறங்கின அப்பம்; இந்த அப்பத்தை புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்." (யோவான் 6:51)

ஒரு கருத்தில் இந்த உலகமானது மரிக்கவில்லை என்று பேசப்படலாம். அவர்கள் தங்களது ஜீவிக்கும் உரிமையை இழந்திருக்கிறார்கள். ஆனால் அந்த ஜீவனை திரும்பக்கொடுக்கும்படியான ஏற்பாடுகளை தேவன் இயேசு மூலம் செய்திருக்கிறார். அது ஆதாமில் இழக்கப்பட்டது. ஆனால் இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்து மூலம் அது திரும்ப கொடுக்கப்படும். இந்த ஆறாயிரம் ஆண்டுகளாக உலகமானது பட்டினியாயும் விழுந்து போன நிலைமையிலும் இருந்து வந்துள்ளது. ஆனால் தேவன் இந்த அப்பத்தை அளித்திருக்கிறார். அது ஆயிர வருட யுகத்தில் அவர்களுக்கானதாக இருக்கும்.

உலகமானது இரத்தத்தில் பங்கு பெற்று இப்படியாக கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு பெறும் என்று வேத வாக்கியங்களில் எங்குமே அடையாளமாக காண்பிக்கப்படவில்லை. சிலர் மட்டுமே இரத்தத்தில் பங்குபெறுவார்கள் என்று குறிப்பிடப்படுகிறது. இது லேவியராகமம் 16ஆம் அதிகாரத்தில் காண்பிக்கப்படுகிறது. இரண்டாம் தரம் கிருபாசனத்தில் தெளிக்கப்படுகிற இரத்தமானது ஜனங்கள் அனைவருக்காகவும் இருந்து, இப்படியாக நீதியை திருப்திபடுத்துகிறதாக இருக்கிறது. இது சகல மனுக்குலத்தையும் மரண தண்டனையிலிருந்து விடுவித்து அப்பத்தை புசித்து, மரியாமலிருக்கும் சந்தர்ப்பத்தை சகலருக்கும் கொடுப்பதை குறிப்பிடுகிறது.

இன்னொரு சித்திரத்தில், பயன்படுத்தப்பட்ட இரத்தமானது தெய்வீக ஏற்பாட்டை மனிதன் ஏற்றுக்கொள்ளுவதை குறிக்கிறதாக இருக்கிறது. புதிய உடன்படிக்கைக்கு நிழலாக இருக்கும் நியாயப்பிரமாணத்தை முத்திரையிடும் போது மோசே நீதியை திருப்திப்படுத்தும்படி முதலாவதாக இரத்தத்தை நியாயப்பிரமாண புத்தகத்தின் மீது தெளிக்கிறார். பிறகு அவர் அதே இரத்தத்தை சகல ஜனங்களின் மேலும் தெளிக்கிறார். (எபிரேயர் 9:19; யாத்திராகமம் 24:4) நியாயப்பிரமாண புத்தகத்தின் மேல் தெளிப்பதற்கு சில நொடிகளே ஆனது; ஆனால் ஜனங்களின் மேல் தெளிப்பதற்கு அதிக நேரம் தேவைப்பட்டது.

ஆயிரம் வருடயுக ஆரம்பத்தில் சபையானது திரைக்கப்பால் தனது தலையுடன் இணைந்தவுடன் இரத்தமானது நீதியை திருப்திபடுத்தும்படியாக உலகத்திற்காக தெளிக்கப்படும். பிறகு கிறிஸ்து மத்தியஸ்தராக ஏற்றுக்கொள்ளும் யாவருக்காகவும் ஒரு வேலையை செய்யத்தொடங்குவர்;.அந்த வேலையானது ஜனங்கள் இரத்தத்தினால் தெளிக்கப்படுவதை அடையாளமாக குறிப்பிடப்பட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால் ஆயிர வருட யுக ஆளுகையின் போது மத்தியஸ்தர் வைக்கிற நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு அவர் மூலம் தேவனுடனான உடன்படிக்கையின் உறவுக்குள் வருவதற்கான சலுகையை நமது இனத்தின் ஒவ்வொரு அங்கமும் பெறுவார்கள்.

## அறியப்பட்டதிலேயே மிகவும் விலையேறப்பெற்ற உணவும் பானமும்

அவர்கள் மேசியாவின் ஆளுகையின்போது தேவைகளை நிறைவேற்றினால் அந்த காலத்தின் முடிவில் அவர்கள் பூரணராயிருப்பார்கள். அவர் அவர்களை பிதாவானவர் முன்பாக சமர்ப்பிப்பார். அப்பொழுது வைக்கப்படும் சோதனையை உண்மையுடன் சகிக்கிறவர்கள் அனைவரும் பிதாவுடன் முழுமையான உடன்படிக்கையின் உறவுக்குள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

நமது தலைப்பு வசனத்தில் (யோவான் 6:54) நாம் வாசிக்கிறதாவது: "என் மாம்சத்தை புசித்து, என் இரத்தத்தை பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு." நம்முடைய கர்த்தரின் கூற்றுகள் அநேக தருணங்களில் சிறுமந்தையை மட்டுமல்ல, திரள் கூட்டத்தினரையும் உள்ளடக்கி மிகவும் பரவலாக்கப்பட்டிருக்கின்றன. அதிலே ஞானம் விளங்குகிறது. இந்த வசனத்தில் கர்த்தர், அவனுக்குள் நித்திய ஜீவன் உண்டு என்று சொல்லவில்லை. ஏனெனில் இக்காலத்தில் பலியின் உடன்படிக்கை செய்து, பாத்திரத்திலும் அப்பத்திலும் பங்கு பெறுகிறவர்களாகிறவர்களில் சிலர் தன்னில்தான் ஜீவனுடைய நிலையை சாகாமையை அடையமாட்டார்கள். ஆனால் அவர்கள் மிகுந்த உபத்திரவத்தை கடந்து வந்து, ஆவிக்குரிய தளத்தில் தாழ்வான நிலையில் ஜீவனைப் பெறுவார்கள். அது நித்திய ஜீவனாக இருந்தாலும் தன்னில் தானே ஜீவனை உடைய நிலைமையாக இருக்காது. சாகாமையை அடைபவர்கள் உயர்ந்த தளத்தில் நித்திய ஜீவனை உடையவர்களாக இருப்பார்கள். திரள் கூட்டத்தை சேர்ந்தவர்கள் நித்திய ஜீவனை பெறுவார்கள். ஆனால் அது சாகாமையல்ல, தன்னில்தானே ஜீவனை உடைய நிலைமையல்ல.

நமது கர்த்தர், "என் மாம்சம் மெய்யான

போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது" (யோவான் 6:55) என்று கூறினதாலே, இது அறியப்பெற்றதிலேயே மிகவும் விலையேறப்பெற்ற உணவாகவும் பானமாகவும் இருக்கிறது என்று அவர் கூறினார் என்று நாம் புரிந்துகொள்ளுகிறோம். வேறு எந்த அப்பமும் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லை மற்றும் வேறு எந்த பானமும் இதைப் போல விலையேறப்பெற்றதாக இருக்க முடியாது. இதில் பங்குபெறுவதின் மூலம் ஒருவன் கனம், மகிமை மற்றும் சாகாமையை, தெய்வீக சுபாவத்தை, தன்னில் தானே ஜீவனை உடைய நிலைமையை அடையலாம்.

உலகத்தின் ஜீவனுக்காக நமது கர்த்தரால் கொடுக்கப்படவிருந்த அவரது மாம்சமே, வானத்திலிருந்து வந்த அப்பமாக இருந்தது. மேலும் இது தான் வனாந்தரத்தில் பொழிந்த மன்னாவினால் நிழலாக காண்பிக்கப்படுகிறது என்று இயேசு விவரித்தார். அவர் கூறியதாவது: "உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவை புசித்திருந்தும் மரித்தார்கள். இந்த அப்பத்தை புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்." மேலும் அவர் கூறினதாவது: "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்." (யோவான் 12:24) அவர் பூமியில் விழுந்து மரித்தார். நாமும் அவரோடு கூட அவரது மரணத்தில் பங்கு பெறுகிறவர்களாகின்றோம். நாம் அவரது பாடுகளிலும் மரணத்திலும் பங்கு பெறுகிறோம். அதில் உலகமானது பங்கு பெறாது. அதன் பலனில் அவர்கள் பங்குபெறுவார்கள்.

இந்த சுவிசேஷயுகத்தின் வேலை அனைத்தும் உலகத்திற்கான உணவையும் அவர்கள் மீது தெளிக்கப்படவிருக்கிற இரத்தத்தையும் தயார்படுத்துவதாகும். ஆனால் நமது தலைப்பு வசனத்தில், நமது கர்த்தரின் செய்தியானது உலகத்திற்குரியதல்ல. அவர் நமக்கு கூறுவதுபோல, "பரலோக ராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படிக்கு நமக்கே அருளப்பட்டிருக்கிறது."

இந்த இருபது நூற்றாண்டு காலம் முழுவதிலும் (இரண்டாயிரம் வருடம்) தேவனுடைய இரகசியங்களை ஒரு குறிப்பிட்ட வகுப்பாரால் மட்டுமே அறிய முடிந்தது. இந்த காரியங்கள் பொதுவான உலகத்திடமிருந்து மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவைகள் உலகத்திற்கு கொடுக்கப்படுவதற்கும் அவர்களுக்காக தேவன் வைத்திருக்கிற ஆசீர்வாதங்களை உணரும்படி செய்ய காலம் வந்திருக்கிறது என்று இப்பொழுது நாம் நம்புகிறோம். ஏழாம் எக்காளம் தொனிக்கும் போது இரகசியங்கள் வெளிப்படுத்தப்படும் என்று வேதவாக்கியங்கள் நமக்கு கூறுகின்றன. அந்த ஏழாம் எக்காளம் இப்பொழுது தொனித்துக்கொண்டிருக்கிறது. ஆகையால் இந்த சத்தியங்களை அறியப் பண்ணுவதே மன்னாவை பொழியப் பண்ணுவதாக தெரிகிறது.

**R5343**

## THE FALL OF JERICO
## எரிகோவின் வீழ்ச்சி

யோசுவா 6:8-11; 14-20

"விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்."- மாற்கு 9:23

எரிகோ என்பது யோர்தானிலிருந்து ஐந்து மைல் தூரத்தில் அமைந்துள்ள மதிற்சுவருடனான ஒரு பட்டணம். இப்போதிக்கிற பட்டணங்களை ஒப்பிடும் போது அது ஒரு சிறிய பட்டணம். ஆனால் அதற்கு மதிற்சுவர் அவசியமாக இருந்தது. ஏனெனில் ஒரு பக்கம் சிரியாவிடமிருந்தும் மறுபுறம் எகிப்திலிருந்தும் திடீர் தாக்குதல்கள் வரும். அது ஒரு மலையின் கணவாய்க்கு செல்லக்கூடிய முக்கியமான வழியில் அமைந்திருந்தது. அது விலையுயர்ந்த உலோகங்களில் மாத்திரமல்ல, விலையுயர்ந்த பொருட்கள், துணிமணிகள் முதலானவைகளில் செழிப்பான ஒரு பட்டணமாக கூறப்பட்டது.

எரிகோ மற்றும் கானானின் மற்ற பட்டணங்கள் அனைத்தையும் பற்றிய கர்த்தருடைய தீர்ப்பு என்னவென்றால், அவைகள் அர்ப்பணிக்கப்பட்டவைகள். இஸ்ரயேலர்கள் கானானுக்குள் சென்றது கொள்ளையடிக்கும் வேலையை செய்வதற்கு அல்ல. கானானின் ஜனங்களுக்கெதிராக தெய்வீக கட்டளையை நிறைவேற்றுவதற்காக சென்றார்கள். கானானியர்களை சிறு ராஜ்யமாக பிரிக்கப்பட்ட, ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் ஒரு பட்டணம் மையமாக அமைந்து இருந்தது. சரித்திரத்தின் படி அவர்கள் ஒருவருக்கொருவர் போரிட்டுக்கொண்டு சோதாமியரைப்போல கொடூரமான ஊழல் நிறைந்தவர்களாக இருந்தனர். அவர்கள் அழிக்கப்படக் கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த வாழ்க்கை அவர்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ நீண்ட காலமாக பிரயோஜனமில்லாதிருந்தது. தேவன் நல்லது என்று கண்டதால் அவர்களை நீக்கிப்போட்டார்.

"உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்று ஆபிரகாமின் சந்ததி மூலமாக சகல மனுக்குலத்திற்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டபடி மரணம் மற்றும் சீரழிவிலிருந்து விடுதலை பெற்று வெளியேறவும் உதவி பெறவும், மிகவும் சாதகமான காலமாகிய மேசியாவின் இராஜ்யத்திற்காக அவர்கள் மகாபெரிய சிறையாகிய ஷியோலில், கல்லறையில் காத்திருப்பார்கள்.

தெய்வீக கட்டளையை நிறைவேற்றுகிறவர்களாக இஸ்ரலேயர்கள் கானானின் பட்டணங்களையும் அதின் குடிகளையும் அவர்களது மிருகங்களையும் அவர்களது சகல உடைமைகளையும் அழிக்க வேண்டியவர்களாக இருந்தார்கள். உலோகங்கள் மட்டுமே அழிக்கப்படாமல் விடப்பட்டன. அவைகள் இஸ்ரயேலர்களது சொந்த பயன்பாட்டுக்காக அல்ல. ஆனால் அவைகள் ஆசாரிப்பு கூடாரம் மற்றும் ஆலயத்தின்அலங்கரத்திற்காக கர்த்தருக்கென்று முன்னதாகவே அர்ப்பணிக்கப்பட்டன.

### "கர்த்தருடைய சேனையின் அதிபதி"

யோர்தானைக் கடந்த பின்பு இஸ்ரயேலர்கள் ஆற்றுக்கும் எரிகோவுக்கும் இடையே தங்கினார்கள். எரிகோ பட்டணம் ஒரு நீண்ட கால முற்றுகையை எதிர்பார்த்து அடைக்கப்பட்டிருந்தது. எரிகோதான் முதலாவது தாக்க வேண்டிய இடம் என்பதை யோசுவா அறிந்திருந்தார். ஆனால் அதை எந்த விதமாக முற்றுகையிட்டால் அதை ஜெயங்கொள்ளலாம் என்பதை அறியாதிருந்தார், எரிகோவின் அருகே அதுபற்றி மறுபரிசீலனை செய்யும் போது, ஆயுதத்தரித்த ஒரு போர் வீரன் அங்கே வந்தார். அப்பொழுது அவர் இஸ்ரயேலைச் சேர்ந்தவரா அல்லது சத்துருக்களைச் சேர்ந்தவரா என்று கேட்ட பொழுது நான் கர்த்தருடைய சேனையின் அதிபதி எனறு பதில் வந்தது. ஒரு தேவதூதன் மனித ஆடைகளையும் ஆயுதங்களையும் தரித்துக்கொண்டு மனித உருவத்தை எடுத்துக்கொண்டு தேவனுடைய

திட்டங்களை யோசுவாவுக்கு கூறும் நோக்கத்துடன் அங்கே தரிசனமானார்.

ஆவியின் ஜீவிகள் தங்களது தனித்தன்மையை மறைத்துக்கொண்டு, மனித உருவத்தையும் ஆடைகளையும் தரித்துக் கொண்டு மனிதரைப் போல புசித்ததையும் பேசினதையும் போன்ற வெளிப்பாடுகளை வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை நான் நினைத்து பார்க்க வேண்டும். இதே முறையிலேயே உயிர்த்தெழுந்த பின்னர் கர்த்தராகிய இயேசு தம்முடைய சீஷர்களுக்கு சில சமயங்களில் சிலுவையில் அறையப்பட்ட சரீரத்திலோ, ஆனால் பெரும்பாலும் தோட்டக்காரனைப் போலவோ, ஒரு வழிப்போக்கனைப் போலவோ முதலானவைகளில் தரிசனம் கொடுத்தார் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். இதே போல, மூன்று ஆவியின் ஜீவிகள் ஒரு சமயத்தில் மானிட சரீரங்களில் மானிட ஆடைகளுடன் ஆபிரகாமுக்கு தரிசனமானார்கள். மேலும் அவர்கள் புசித்து, ஆபிரகாமுடன் பேசினார்கள். (ஆதியாகமம் 18:8,9) அவர்கள் தங்களை வெளிப்படுத்தியது வரை அவர்களை தூதர்கள் என்று ஆபிரகாம் அறியாதிருந்தார்.

இந்த பரலோக தூதர்கள் மூலமாக எரிகோவை பிடித்துக்கொள்ளும் தெய்வீக திட்டம் யோசுவாவுக்கு வெளிப்படுத்தப்பட்டது. அவர் உடனே அதை நிறைவேற்ற ஆரம்பித்தார். தீர்ப்பிடப்பட்ட அந்த பட்டணத்தை சுற்றிலும் ஒவ்வொரு நாளும் கம்பீரமான ஊர்வலம் இருந்தது. ஒவ்வொரு கோத்திரத்திலும் இருந்த யுத்த வீரர்கள் முன்னாடி நடந்து செல்ல வேண்டும். அதன் பின்னே எக்காளம் ஊதுகிற ஆசாரியர்கள் சென்றார்கள். அவர்களுக்குப் பின் உடன்படிக்கை பெட்டி சென்றது. அதற்கு பின் யுத்த வீரர்கள் சென்றார்கள். கட்டளையிடப்பட்டதற்கு இணங்க எந்தவித சத்தமும், எச்சரிக்கையும் கொடாமல் ஊர்வலம் சென்றது. அது புது வருடத்தை அறிவிக்கிற போதும் யூபிலி வருடத்தில் விசேஷமாக பயன்படுத்துகிற எக்காளத்தை ஊதுகிறதைத் தவிர எல்லாம் அமைதியான சவ ஊர்வலத்தை போலிருந்தது.

எரிகோவை சுற்றிய இந்த அமைதியான சவ ஊர்வலம் ஒரு தடவை ஆறு நாட்கள் இருந்தன. பிறகு ஏழாவது நாள் அவர்கள் ஏழு தடவை சுற்றி வந்து ஏழாவது தடவை சுற்றும் போது ஏழு ஆசாரியர்களும் எக்காளம் ஊதினார்கள். அவர்கள் பட்டணத்தை ஏழாவது தடவை சுற்றிவந்து பட்டணத்திற்கு எதிரே நின்று ஊதிக்கொண்டிருந்தார்கள். உடனே பட்டணத்தின் அலங்கம் இடிந்து விழுந்தது. "தரை மட்டமானது" என்ற பொது மொழிபெயர்ப்பின் கூற்று ஒரு பலமுள்ள சரியான ஒன்றாக காணப்படுகிறது. பட்டணத்தின் அலங்கம் கர்த்தரின் பெட்டிக்கு முன்பாக நொறுங்கி விழுந்தது. ஆனால் எல்லா அலங்கமும் விழவில்லை. ராகாப் என்ற வேசியின் வீடு இருந்த ஒரு பகுதி அலங்கம் மட்டும் விழவில்லை என்று பதிவு நமக்கு கூறுகிறது. (யோசுவா 2:15-19) கர்த்தர் கட்டளையிட்டிருந்த அந்த பட்டணத்தை அழிக்கும் வேலையை சுலபமாகவும் சீக்கிரமாகவும் முடிக்கக்கூடிய அளவுக்கு அலங்கம் இடிந்து விழுந்தது.

இது ஒரு விபரீதமான செயல் இல்லையா என்று கேட்கப்படலாம். தெய்வீக மேற்பார்வையில் தேவ சித்தம் சுலபமாக நிறைவேற நடந்தது என்று நாங்கள் பதில் கூறுகிறோம். தெய்வீக இயக்கத்தின் கீழ் ஒரு பூமி அதிர்ச்சியின் அதிர்வினால் எரிகோவின் அலங்கம் இஸ்ரயேலருக்கு முன்பாக இடிந்து விழுந்திருக்கக்கூடும். தேவன் தமது நோக்கத்தை நிறைவேற்ற இப்படியாக குறுக்கிடுவது கூடாத காரியமல்ல என்பதை வேதாகமம் சம்பந்தமான சகல சூழ்நிலைகளிலும் நாம் கவனிக்கிறோம்.

பேராசிரியர் ரைட் (Prof.Wright) அறிவிக்கிறதாவது: "அலங்கம் விழுந்ததற்கு நடுநிலையான காரணம் பூமிக்கு அடியில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியாக இருந்தது. அது பட்டணத்தின் அலங்கத்தின் ஒரு பகுதியை அசைத்து மனிதர்கள் மேல் விழுந்து அவர்கள் புதைந்தனர்." இது பூமியதிர்ச்சியின் இடமாக, அங்கே நடக்கக்கூடியதாக இருந்தது. பேராசிரியர் லாசன் (Prof. Lawson) சான் பிரான்சிஸ்கோவின் அருகே நடந்த பூமியதிர்ச்சியில் இதே மாதிரி விளைவுகள் ஏற்பட்டது என்று கூறி அவர் விளக்குகிறதாவது: "அதிகம் மீளும் தன்மை கொண்ட (elastic) பாறைகளின் மூலம் குறைந்த வீச்சுடன் சென்ற பூமியின் அலைகள் உடனே இந்த பொருளில் பெரிய வீச்சுடன் சிறிய அசைவாக மாற்றப்பட்டு அதிக அழிவை ஏற்படுத்தியது."

பேராசிரியர் ரைட் மேலும் கூறுகிறதாவது: "அந்த இடத்தின் (ஒக்லேண்டு) புகை போக்கிகள் அனைத்தும் கீழே விழபண்ணப்பட்டன. செங்கற்கள் சிதறடிக்கப்பட்டன. கோதுமை தானியம், விதைப்பவன் கைகளிலிருந்து அப்பொழுது விழுந்தது. குறித்த நேரத்தில் எரிகோவின் அலங்கம் விழுந்தது என்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது. பூமியதிர்ச்சியுடன் இணைந்த பேரழிவு ஆசாரியர்களின் கடைசி எக்காளத்துடன் இசைவாக்கப்பட்டது என்று நாம் தாராளமாக நம்பலாம். சரித்திரம் மற்றும் அந்த பகுதியின் புவியியல் நிலைமைகளின் வெளிச்சத்தில் அது ஒரு குறிப்பிடத்தகுந்த உண்மையான நம்பத்தகுந்த நிகழ்வாக அதன் பதிவு இருக்கிறது. அது பாரம்பரியத்தினால் அதிசயமானது, நம்ப முடியாது என்று மாற்றப் படாதிருக்கக் கூடும்.தேவன் பேரில் விசுவாசம் உடைய புவியியல் வல்லுநர்களுக்கு அது மிகவும் நியாயமானதாக இருக்கிறது. விமர்சனம்,அருமையான கருத்திலிருந்து விடுபட்டு, அது பாரம்பரியத்தினால் அலங்காரமில்லாதிருக்கிறது."

எரிகோ பிடிக்கப்பட்ட காரியம் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகிறது. ஒரு அர்த்தத்தில் அது கானானின் சகல பட்டணங்களையும் குறிக்கிற அவற்றின் தலைநகராக இருக்கிறது. ஆறு நாட்கள் எதுவும் செய்யாமல் பட்டணத்தை சுற்றிவந்தது. ஒவ்வொரு நாளும் ஒரு ஆயிரம் வருடங்களைக் கொண்ட பெரிய வாரத்தின் ஆறு மகா நாட்களைக் குறிக்கிறதாக இருக்கிறது. உலக சரித்திரத்தில் பாவமானது வேரூன்றி அசைக்க முடியாததாக இருக்கிறது. கர்த்தரின் ஜனங்கள் முடிவாக பாவம் அழிக்கப்படும் "துன்மார்க்கர் யாவரையும் தேவன் அழிப்பார்" என்கிற வேதாகம செய்தியை அறிவித்துக்கொண்டு, எக்காளம் ஊதிக்கொண்டு பாவத்திற்கு விரோதமாக சாட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் "புத்தியற்ற மிருக ஜீவன்களைப் போல கெட்டழிந்து போவார்கள்." "அவர்கள் நித்திய ஆக்கினையினால் தண்டிக்கப் -படுவார்கள்."–"இரண்டாம் மரணத்தினால்." (சங்கீதம்; 145:20; 2 பேதுரு 2:12; 2 தெசலோனிக்கேயர் 1:9; வெளிப்படுத்தல் 20:14)

இந்த சகல சாட்சிகளிலிருந்தும் கொஞ்ச பலனே வந்திருக்கிறது. நாம் மகா ஏழாம் நாளாகிய மேசியாவின் ஆளுகையாகிய ஆயிரம் வருடத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறோம். அதில் தீமையின் கோட்டை ஏழு தடவையையோ அல்லது முழுவதுமாகவோ சுற்றி வளைக்கப்படும். ஜெய சத்தம் மேலே எழும்பும். சாத்தானின் பொய்யும் மனித வஞ்சமும், பாவம் மற்றும் வஞ்சகத்தின் பலமான சுவர்கள் விழும். உலகத்தில் யாரையும் மோசம் போக்காதபடி சாத்தான் ஆயிரம் வருடம் கட்டப்படுவான். சகல தீமைகளும், கொள்கைகளும் பாவத்தை சிநேகிக்கிற அனைவரும் இரண்டாம் மரணத்தில் முற்றிலுமாக அழிக்கப்படுவார்கள். இப்படியாக நாம் நீண்ட காலமாக ஜெபித்துக்கொண்டும் எதிர்பார்த்துக் கொண்டும் இருக்கிற மகிமையான யுகம் வரும். அதில் இனி சாபமிராது, தவிப்பும் இராது, அழுகையும் மரணமுமிராது.

அந்த வெற்றி இரட்சிப்பின் அதிபதியும் கர்த்தரின் சேனைகளின் அதிபதியுமான இம்மானுயேலின் இயக்கம் மற்றும் வழிநடத்துதலின் கீழ் இருக்கும். அப்பொழுது கிறிஸ்துவும் சபையும் ஆவியின் தளத்தில் திரைக்கப்பால் ராஜ்யத்தின் மகிமையில் இருப்பார்கள். ஆனால் பூமிக்குரிய தளத்தில் ராஜ்யத்தின் பிரதிநிதிகள் இருப்பார்கள்.எனினும் அவர்களது ஆளுகையும இயக்கமும் மகிமையில் உள்ள ஆவிக்குரியவர்களின் வழிநடத்துதல் மற்றும் கட்டளைகளின்படி இருக்கும். சுவிசேஷ யுகத்தில், பெந்தெகொஸ்தே நாளில் ஆரம்பிக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் ஜெனிப்பித்தலில் பங்குபெற்றவர்களைத் தவிர வேறு யாரும் உயிர்தெழுதலில் பரலோக கூட்டத்தில் பங்குடையவர்களாக இருக்க மாட்டார்கள் என்று வேதவாக்கியங்கள் தெளிவாக கூறுகிறது.

இயேசு மற்றும் சபைக்கு முன்னிருந்த மகிமையான குணலட்சணத்தையுடைய யோவான் ஸ்நானனைப் போன்றவர்கள் மணவாளனின் தோழனாகவோ, மணவாட்டி வகுப்பாரின் தோழனாகவோ இருக்க முடியும். அவர்கள் வேறொரு வகுப்பை சேர்ந்தவர்களாக இருப்பார்கள். கல்வாரியின் பலிக்கு முன்னதாக யாரும் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாததினால் அதற்கு முன்னதாகவே யாரும் பரிசுத்த ஆவியினால் பிறந்திருக்க முடியாது. எபிரேயர் 11ஆம் அதிகாரத்தில் பரிசுத்த பவுல் எண்ணிக்கையிடுகிற மோசே போன்ற உயர்ந்த குணமுடைய அனைவருக்கும் மகிமையான ஆசீர்வாதங்கள் வருகிறது என்று அவர் அறிவிக்கிறார். சபையினறால் மட்டுமே பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்கள் பூரணமடைவார்கள் என்று அவர் அந்த அதிகாரத்தை (எபிரேயர் 11) முடிக்கிறார். தேவன் நமக்கு (சபைக்கு) மேலான காரியங்களை அருளியிருக்கிறார். தூதர்களுக்கும் மேலாக நமது இரட்சகருடன் அவரது மகிமை மற்றும் சாகாமையில் பங்குதாரராக ஆவியின் சுபாவத்தை அடைவதே நமது உயர்ந்த பங்காக இருக்கிறது.

எனினும் பழைய ஏற்பாடு கால பாத்திரர்களுக்கு கிடைக்கும் பரிசு மகிமையானதாக இருக்கும். அவர்கள் கல்லறையிலிருந்து பூரண மானிடர்களாக திரும்பிக்கொண்டு வரப்படுவார்கள். மேசியாவின் ராஜ்யத்தில் இசைவுக்குள் வருகிற அனைவருக்கும் மறுசீரமைப்பு என்றால் என்ன என்பதற்கு உலகிற்கு மாபெரும் திருஷ்டாந்தமாக இருப்பார்கள். அந்த ராஜ்யத்தில் உலகெங்கும் ஆளுனர்களாக அல்லது பிரபுக்களாக இருப்பதே அவர்களது பங்கு மற்றும் கனமாக இருக்கும். (சங்கீதம் 45:16)

தெய்வீக ஏற்பாடுகள் எவ்வளவு குறிப்பிடத்தகுந்தாக இருக்கிறது! நமது சிருஷ்டிகர் ஆசீர்வாதங்களின் ஊற்றாக இருந்து அவரது இரக்கங்களையும் கிருபைகளையும் ஒவ்வொருவர் மேலும் பொழிகிறவராக இருக்கிறார். நமது கர்த்தராகிய இயேசு, நமது இரட்சிப்பின் அதிபதி, தமது விசுவாசத்தை தமது சிலுவை மரண பரியந்தம் வெளிப்படுத்தி, யேகோவாவுக்கு அடுத்தபடியாக உயர்ந்த ஸ்தானத்தை அவர் முன்னரே அடைந்திருக்கிறார். விசுவாசமுள்ள சபை, சுய பலியின் குறுகலான பாதையில் இரட்சகரின் அடிச்சுவட்டில் நடந்து அவரது மகிமை மற்றும் ராஜ்யத்தில் அவருக்கு அடுத்தபடியான ஸ்தானத்தை பெறுவார்கள். பிறகு அனைவரையும் பாவம் மற்றும் சீரழிவிலிருந்து மேம்படுத்தி ஏதேனில் ஆதாமின் பூரணத்திற்கு கொண்டு வர ஆயிர வருடங்கள் ஒவ்வொருவர் மேலும் அவனவனது வரிசையின்படி தெய்வீக ஆசீர்வாதங்கள் பொழியும். "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும்" அதன் பலனாக இருக்கும்; ஏனெனில் மாறுபாடான சிந்தையுடையவர்கள் ஜனத்திலிராதபடிக்கு இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். (அப்போஸ்தலர் 3:23)

**R5344**

## MAMMON THE PRINCIPLE OF SELFISHNESS
# உலகப்பொருள் சுயநலத்தின் கொள்கை

"இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது." – மத்தேயு 6:24

ஒரு மனிதன் இரண்டு அல்லது அதற்கு மேலான எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முயற்சிக்கலாம். ஆனால் யாரும் ஒரு எஜமானுக்கு மேலாக திருப்தியான ஊழியக்காரனாக இருக்க முடியாது. இரண்டு ஊழியமும் ஒரே மாதிரி இருக்காது. ஒரு ஊழியம் மற்ற ஊழியத்தை ஓரளவுக்கு குறைவுப்படுத்தும். இந்த காரியத்தை கர்த்தர் தமது மலை பிரசங்கத்தில் விளக்கினார். நமது தலைப்பு வசனத்தில் எஜமான்களில் ஒருவராக தேவனையும் இன்னொரு எஜமானனாக உலகப்பொருளையும் அவர் குறிப்பிடுகிறார். உலகப் பொருள் என்பது தேவனுக்கும் அவரது நீதிக்கும் எதிரான அனைத்தையும், சுயநலம் மற்றும் பாவம் இன்னும் அநீதிக்கு சம்பந்தப்பட்ட அனைத்தையும் குறிக்கிறது.

உண்மையைச் சொல்லப்போனால் நாம் பாவத்திற்கு அடிமைகளாக பிறந்திருக்கிறோம். நமது ஆதி பெற்றோர்களின் கீழ்ப்படியாமையினால் நாம் இந்த அடிமைத்தனத்திற்கு விற்கப்பட்டுள்ளோம் என்று வேதவாக்கியங்கள் நமக்கு கூறுகின்றன. ஆகையால் பாவமானது உலகின் முழு மனுக்குலத்தின் மேல் ஒரு பிடிமானத்தையும் பெற்றிருக்கிறது. அவர்கள் அனைவரும் அடிமைகள். இந்த அடிமைத்தனத்தின்

பிடியிலிருந்து அவர்கள் தங்களைத் தாங்களே விடுவித்துக் கொள்ள இயலாதவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில் அது உலகைச் சுற்றிலும் எல்லா இடங்களிலும் இருக்கிறது.

சிலர் தீமையில் விருப்பமுற்று அதற்கு விசுவாசமாக இருக்கிறார்கள்; ஆனால் பெரும்பாலானோர் சுயத்துக்கு ஊழியம் செய்வது தேவனை எதிர்ப்பதாகும் என்பதை உணர்ந்து உலகப் பொருளுக்கு இருதயத்தில் விசுவாசமில்லாதிருக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் உலகப்பொருளுக்கு, சுயத்திற்கு ஊழியம் செய்கிறவர்கள், அரசியல் வட்டத்திலும், சமய வட்டத்திலும், சமூக வட்டத்திலும், பொருளாதார வட்டத்திலும் உயர்வை பெறுகிறார்கள். தற்காலத்தில் சுயநலம் வெற்றி பெறுகிறது. அனைத்து மானிட ஏற்பாடுகளும் சுயநலத்தின் திசையிலேயே இருக்கிறது. ஒருவர் சுயநலமில்லாதவராயிருந்தால், இந்த திசையில் சிறப்பாக வேலை செய்கிறார். இல்லையென்றால் சக ஜீவிகளிடமிருந்து எதிர்ப்பு, தவறாக புரிந்து கொள்ளுதல் முதலானவைகளைப் பெறுவார்.

ஆனால் இயேசு ஒரு பதிய ஒழுங்கை ஆரம்பித்தார். பாவத்தை கைவிட்டு தேவனை விசுவாசிக்கிறவர்களை அவர் தம்மிடத்தில் திரும்ப ஏற்றுக்கொள்ள தயாராயிருக்கிறார் என்று இயேசு அறிவித்தார். தேவனுடைய கிருபையான ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்ளுகிறவர் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் விடுவிக்கப்படுவார்கள். "குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்." (யோவான் 8:36)

### சுயநலம் சாத்தானின் குணலட்சணம்

அநேக ஜனங்கள் தங்கள் சுபாவங்களிலே சுயநலமானது வேரூன்றினதாக இருக்கிறது. ஆகையால் சமூக நீதியாகவும் வேறுவிதமாகவும் செய்ய வேண்டியவைகளில் அது மிகவும் கலந்திருக்கிறது. ஆகையால் நமது கர்த்தரின் செய்தியை கேட்ட அநேகருக்கு அது அறிவீனமாக காணப்பட்டது. நமது கர்த்தர் எதையும் நிறைவேற்றாமல், தனது வாழ்க்கையை வீணடித்து இழந்தது அவர்களுக்கு முட்டாள்தனமாக இருந்தது. ஆகையால் அவரது சீஷர்களாவது வீணானது என்று அவர்கள் நினைத்தனர். ஆகையால் அவர்கள் சாத்தானுக்கு ஊழியம் பண்ணுகிறோம் என்று அறியாமல் உலகப்பொருளுக்கு ஊழியம் பண்ண தொடர்கிறார்கள்.

உலகப்பொருளின் கொள்கை, சுயநலத்தின் கொள்கை சாத்தானுடையதாக இருக்கிறது. ஆனால் அவன் தன் விரி குளம்பின் காலை மிகவும் ஜாக்கிரதையாக மறைத்து, ஒளியின் தூதனாக தன்னை காண்பித்துக் கொள்ளுகிறான். அவன் தன்னுடைய வழியாகிய சுயநலத்தின் வழியை பின்பற்ற ஜனங்களை அழைக்கும் அதே சமயம் தேவனை தவறாக சித்தரிக்கிறான். நமது கர்த்தரின் வழியை பின்பற்றுகிற அனைவரும் கேலியாக்கப்படுகிறார்கள். ஏனெனில் இந்த உலகத்தின் அதிபதி அதிக வல்லமை உடையவனாக இருக்கிறான். அவனுக்கு ஊழியம் பண்ணுகிறவர்கள் வேறு எந்த நியாயமான அல்லது முறையான வழியையும் காண முடியாது. இதுவே ஒளியின் பிள்ளைகளுக்கும் இருளின் பிள்ளைகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம்.

சாத்தான் தன்னை ஒரு ஒளியின் தூதனாக அமைத்து வைத்திருக்கிறான். ஆனால் அவர்களது ஊழியக்காரர்களால் இதைக் காணமுடியாது. இப்படியாக அவன் அவர்களுக்கு சேதத்தையே தொடர்ந்து கொடுக்கிறான். அவன் கூறுவதாவது: "நீங்கள் உலகப்பொருளுக்கு ஊழியம் செய்ய வேண்டாம். ஆனால் உங்கள் மார்க்கத்தில் நடுத்தரமாக இருங்கள். தற்கால காரியங்களுக்கு ஊழியம் பண்ணுங்கள். இந்த பக்கம் கொஞ்சமும் அந்தப்பக்கமும் கொஞ்சமும் செய்யுங்கள்." அவர்கள் கூறுகிறதாவது: "நாங்கள் மெய்யாகவே எங்கள் இருதயத்தில் தேவனுக்கு ஊழியம் செய்கிறோம். ஆனால் வெளியரங்கமாக நாங்கள் உலகப்பொருளுக்கு ஊழியம் பண்ணவேண்டும். நாங்கள் தேவனுக்கு ஊழியம் செய்கிறோம் என்று உலகம் கண்டால், உலகப்பிரகாரமான ஜீவியத்தை தொடர்வதில் நாம் கஷ்டத்தை அடைவோம்." அநேகர் இந்த இரட்டை மார்க்கத்தை முயற்சிக்கிறார்கள். இந்த கொள்கை சுவிசேஷயுகத்தின் மூலம் சகலமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தைகளை பயன்படுத்த காரணமில்லாதிருந்தால் இயேசு இந்த வார்த்தைகளை பயன்படுத்தியிருக்க மாட்டார் என்பது நிச்சயம். நாம் தேவனுக்கு விசுவாசமாக இருந்தால், நாம் உலகத்திற்கு உண்மையும் பிரியமுமான ஊழியனாக இருக்க முடியாது என்று இயேசு நமக்கு இங்கே கூறுகிறார். மேலும் நமது இருதயத்தை உலகப்பொருளுக்குக் கொடுத்தால் நாம் தேவனுக்கு பிரியமாயிருக்க முடியாது.

பெரும்பாலான கிறிஸ்தவ ஜனங்கள் இக்காலத்தில் இந்த மனோபாவத்தில் இருக்கிறார்கள். அவர்கள் தேவனுக்கு ஊழியம் செய்ய முயற்சிக்கிறார்கள். எனினும் அவர்கள் தங்களது தற்கால வாழ்க்கையின் நடவடிக்கைகளையும் காரியங்களையும் உலகப்பொருளின் தற்கால ஒழுங்குகளுக்கும் இசைவாக உலகப்பிரகாரமாக இருக்க முயற்சிக்கிறார்கள். தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்வதுகூடாத காரியம் என்பதை அவர்களுக்கு கர்த்தர் அறியப்பண்ணுவார். அவருக்கு ஊழியம் பண்ணுகிறவர்களுக்கு அவர் ஊழியம் கொடுப்பார் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். தேவனைப் பொருத்தவரை நடு நிலையான மார்க்கம் இல்லை என்பதை அவர்கள் அறிய வேண்டும். உலகப் பொருள் பகுதியான ஊழியத்திற்கு பகுதியான வெகுமதி கொடுக்க விரும்பலாம். ஆனால் இயேசுவைப் பொருத்தவரை நமது ஊழியம் பிரிக்கப்படாததாக இருக்க வேண்டும்.

குமாரன் விடுதலையாக்குகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மெய்யாகவே விடுதலையாவார்கள். உலகத்தில் அவர்களுக்கு உபத்திரம் இருக்கும். ஆனால் எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானத்தை அவர்கள் பெறுவார்கள். அவர்களது ஆசீர்வாதங்களையும் உண்மையான நிலைமைகளையும் மற்றவர்களால் உணர்ந்து கொள்ள முடியாது. யாராவது இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முயற்சித்தால், அவர்கள இருதயம் யாராவது ஒருவரை விட்டுப்போகும். ஏனெனில் மென்மேலும் தன்னுடைய நிலைமையை வெறுப்பார். அவர் குமாரனால் விடுதலையாக்கப்பட்டிருந்தால் அவரது ஊழியத்தில் முழுமையாக ஈடுபட்டிருந்தால் , பரலோக பிதாவானவரால் அவரது கிருபையான திட்டத்தினால் கையாளப்பட்டிருக்கிற அன்பு, ஞானம், நீதி மற்றும் தெய்வீக ஏற்பாட்டின் இரக்கத்திற்கு மென்மேலும் நிரப்பும். அதனிமித்தம் உலக காரியங்களுக்கு அவருக்கு நேரம் இருக்காது.

R5345

## HOW ISREAL CROSSED JORDAN

# இஸ்ரயேலர்கள் எப்படி யோர்தானைக் கடந்தார்கள்

யோசுவா 3: 7-17

"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்."- ஏசாயா 41:10

நதியை கடப்பதற்கென்று நியமிக்கப்பட்ட நாளுக்கு மூன்று நாட்களுக்கு முன்பாக, தெய்வீக இயக்கத்தின் கீழ் இஸ்ரயேலின் சேனை யோர்தான் பள்ளத்தாக்கின் உயர்ந்த பகுதியிலிருந்து புறப்பட்டது. யோர்தான் நதியானது இந்த பருவ காலத்தின்படி வெள்ளம் கரை புரண்டு ஓடியது. சதாரணமான காலத்தில் வெள்ளம் தொண்ணூறு அடி அகலம் செல்லும். ஆனால் இந்த சமயத்தில் ஐந்நூறு அடி அகலம் ஓடியது.

பொதுவாக கானானியர்களும் குறிப்பாக எரிகோவின் ஜனங்களும் படையெடுப்பை எதிர்பார்த்திருந்தாலும், ஆறு கடந்து செல்ல முடியாதபடியும் பாலங்கள் கொஞ்சம் மட்டுமே தெரியக்கூடிய அளவுக்கும் இருந்த போது அதை எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். இஸ்ரயேலர்களும் கூட சீக்கிரத்தில் கானானுக்குள் நுழைவதில் விசுவாசத்தை அல்லது சந்தேகத்தை அப்பியாசப்படுத்த பல்வேறு சந்தர்ப்பங்களை பெற்றிருந்தனர். தேவனிடத்தில் விசுவாசம் மற்றும் தெய்வீக நியமனங்களில் நம்பிக்கை ஆகியவற்றில் மதிப்பு மிக்க பாடங்களை அவர்களது வனாந்தர அனுபவம் கற்றுக்கொடுத்திருந்ததினால் அவர்களது சந்தேகங்கள் அல்லது பயங்கள் அல்லது முறுமுறுப்புகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

யோர்தானைக் கடக்கும் நாள் வந்தது. தெய்வீக கட்டளையின்படி யோசுவா, ஆசாரியர்களை உடன்படிக்கை பெட்டியை எடுத்துக்கொண்டு ஆற்றின் ஓரத்தில் அவர்கள் பாதங்கள் நனையும் வரை போகச் சொன்னார். ஆசாரியர்களின் பாதங்கள் தண்ணீரில் பட்ட உடனே, தண்ணீர் பின்வாங்க ஆரம்பித்தது. ஆசாரியர்கள் உடன்படிக்கை பெட்டியை சுமந்து கொண்டு சென்று யோர்தானின் நடுவில் பாறை நிறைந்த தரையில் நின்றார்கள். உடன்படிக்கை பெட்டி தெய்வீக வாக்குத்தத்தை குறிப்பிட்டது; அதன் கீழ்தான் எகிப்தை விட்டு புறப்பட்டு பெரிய பலன்களை நம்பி வந்தார்கள்.

இஸ்ரயேலின் சேனைகள் யோர்தானின் கரைகளில் மைல் கணக்காக வரிசையாக நின்று யோர்தானை கடந்து மோவாபிலிருந்து கானானுக்கு சென்றார்கள். இப்படியாக யோர்தானைக் கடத்தல் முற்றிலுமாக நிறைவேறியது. பன்னிரெண்டு கோத்திரங்களுக்கு அடையாளமாக இருக்கும்படி பன்னிரெண்டு கற்களை ஆற்றின் படுக்கையிலிருந்து எடுத்துக்கொண்டு போய் தாங்கள் தங்கும் இடத்திலேயும், கரையிலிருந்து பன்னிரெண்டு கற்களை எடுத்துக்கொண்டு போய் ஆசாரியர் நின்ற ஆற்றில் நடுவிலும் ஞாபகச் சின்னமாக அல்லது தேவனுடைய உதவியின் ஞாபகச் சின்னமாக வைத்தார்கள். கடைசியாக ஆசாரியர்கள் ஜனங்களை பின்தொடர்ந்து கரைக்கு சென்றார்கள். உடனே ஆற்றின் நீர் தனது பழைய நிலைக்கு திரும்பியது.

### அற்புதம் எப்படி நிகழ்த்தப்பட்டது

இந்த அற்புதம் எப்படி நிகழ்த்தப்பட்டது என்பதின் நிச்சயத்தை நாம் அறிகிற அந்த உண்மை அதன் மதிப்பை குறைவுபடுத்தக்கூடாது. தேவனுக்கு எதுவுமே அற்புதம் இல்லை. ஏனெனில் அவர் தமது சித்தத்தை எல்லா வகையிலும் நிறைவேற்றக்கூடிய தமது சொந்த வல்லமையை உடையவராயிருக்கிறார். தெய்வீக நடைமுறைகளை நாம் புரிந்துகொள்ளாததால் அநேக காரியங்கள் அற்புதங்களாக இருக்கின்றன. நாமே அற்புதங்களாக இருக்கிறோம். பிரமிக்கத்தக்க அதிசயமாக உண்டாக்கப்பட்டோம். தாவரத்தின் வளர்ச்சி, பூ, அல்லது ஒரு புல்லின் இதழ் நமக்கு ஒரு அற்புதமாக இருக்கிறது. இது நமது வல்லமைக்கு அப்பாற்பட்டது. பொதுவாக இது நமது புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்ட ஒரு செயல்பாடாக இருக்கிறது.

தண்ணீர் குவியலானது ஆதாம் என்னும் ஊர் வரை இருந்ததாக பதிவு கூறுகிறது. இந்த இடம் யோர்தானில் எரிகோவுக்கு மேலே பதினோரு மைல் தொலைவில் இருந்திருப்பதாக பேராசிரியர் ரைட் (Prof. Wright) உறுதியாக கூறுகிறார். ஒரு மண் சரிவு ஏற்பட்டு தண்ணீர் ஒரு குவியலாக, ஒரு ஏரியாக ஆனது என்று நமக்கு உறுதியளிக்கிறார். அந்த நிலச்சரிவு ஆற்றில் ஒரு குறுகலான பகுதியை அடைத்து அதன் மூலம் அங்கே செங்குத்தான கரைகள் உண்டாயின. அந்த பகுதியின் மண் தன்மை, மலைப்பகுதியில் மண் சரிவு ஏற்பட்டு யோர்தானின் குறுகிய கால்வாயை அடைக்க சாதகமாக இருந்தது. உண்மையிலேயே இதே பகுதியில் கிபி 1267இல் இதே மாதிரியான சரிவு ஏற்பட்டு யோர்தானுக்கு அணையை ஏற்படுத்தி பல மணி நேரம் ஆற்றின் தரை தெரியும்படி செய்து, தண்ணீரானது சவக்கடலுக்கு சென்றது என்று சரித்திரம் கூறுகிறது.

பேராசிரியர் ரைட் கூறுகிறவதாவது: "வேதாகம பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலைமைகளுக்கு இந்த உண்மைகள் மிகவும் பலமாக இணக்கமாக இருப்பதை புவியியல் வல்லுனர்கள் நம்புவதற்கு கொஞ்சம் கஷ்டப்படுகிறார்கள். அதேசமயம் எழுதப்பட்ட பதிவு அதுவே மிகவும் துல்லியமாகவும், இலக்கிய விமர்சனம் கவனிக்க முடியாதபடி நேரில் பார்த்த கலப்படமற்ற உண்மையான கதையாகவும் இருக்கிறது."

சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளில் மிகவும் சரியாக பொருத்தி வருகிற நேரத்தில் அணிவகுத்து செல்லும்படியான தெய்வீக கட்டளை கொடுக்கப்பட்டதே இந்த உண்மை கதையின் அற்புதமாக இருக்கிறது.

### பாடம் பதியவைக்கப்பட்டது

இஸ்ரயேலுக்கு தெய்வீக கிருபையின் இந்த பெரிய செயல் எதிர்கால சந்ததிக்கு நினைப்பூட்டும் அடையாளமாயிருக்கும்படி இந்த கற்கள் அடையாளமாக வைக்கப்பட்டன. யோசுவா அறிவுறுத்திக் கூறியதாவது: "நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்க வேண்டியது என்னவென்றால், இஸ்ரயேலர் வெட்டாந்தரை வழியாக இந்த யோர்தானைக் கடந்து வந்தார்கள். பூமியின் சகல ஜனங்களும் கர்த்தருடைய கரம் பலத்ததென்று அறியும்படிக்கு நீங்கள் நாளும் கர்த்தருக்கு பயப்படும்படிக்கும், உங்கள் தேவனாகிய கர்த்தர் சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை நாங்கள் கடந்த தீருமட்டும் எங்களுக்கு முன்பாக வற்றிப்போகப் பண்ணினது போல், உங்கள் தேவனாகிய கர்த்தர் யோர்தானின்

தண்ணீருக்கும் செய்து, அதை உங்களுக்கு முன்பாக நீங்கள் கடந்து தீருமளவும் வற்றிப்போகப் பண்ணினார் என்று அறிவிக்கக்கடவீர்கள்.'' யோசுவா 4:21-24

## கானானின் இளைப்பாறுதலுக்குள் நுழைதல்

இஸ்ரயேலர் யோசுவாவின் தலைமையின் கீழ் கானானுக்குள் நுழைந்தது, சபையானது விசுவாசத்தின் இளைப்பாறுதல் மற்றும் விசேஷித்த கிருபைக்குள் மெய்யான யோசுவாவாகிய இயேசுவின் கீழ் நுழைவதை அடையாளப்படுத்துவதாக இருக்கிறது என்று பரிசுத்த பவுல் எபிரேயர் 4:5-8 இல் கூறுகிறார். இஸ்ரயேலர்கள் வனாந்திர பிரயாணத்திலிருந்து இளைப்பாறுதலைப் பெற்றார்கள். அது ஒரு ஆச்சரியமான மாற்றமாக, ஒரு ஆசீர்வாதத்தின் மாற்றமாக அவர்களுக்கு இருந்தது. எனினும் அது தேவன் அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருந்த அனைத்தின் முழு உணருதலாக இல்லை. முழு உணருதல் ஏதேனை அடைந்த பிறகு தான் அடைய முடியும். இது மேசியாவின் மறு சீரமைப்பின் மகிமையான வேலையின் பலனாகும். அப்போஸ்தலரின் வழிகாட்டுதலைத் தொடர்ந்து மோசே மரணம் வரை இஸ்ரயேலரின் அனுபவங்கள் சிலுவையில் முடிந்த நியாயப்பிரமாண யுகத்தை குறிப்பிடுகிறது என்று நாம் தெரிந்து கொள்ளலாம். பெந்தேகோஸ்தே நாளில் ஆரம்பித்த சுவிசேஷ யுகம் இளைப்பாறுதலுக்கு செல்வது யோர்தானைக் கடந்து கானான் தேசத்தை சுதந்தரித்து கொள்வதின் மூலம் நிழலாக காண்பிக்கப்படுகிறது.

"விசுவாசித்தவர்களாகிய நாமோ இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்.'' இது நமது விசுவாசத்தை அப்பியாசப்படுத்துகிற அளவுக்குத் தக்கதாக இருக்கிறது. விசுவாசத்தை அதிகமாக அப்பியாசப்படுத்துகிறவர்கள் அதிகமான இளைப்பாறுதலையும்,வெற்றியையும் பெற்று அமைதியை உடையவர்களாயிருப்பார்கள். குறைவான விசுவாசத்தை பெற்றிருந்தவர்கள் குறைவான இளைப்பாறுதலை பெற்று அவர்களது சலுகைக்குள் கொஞ்சமாகவே நுழைவார்கள். எரிகோவையும் மற்ற கானான் தேசத்து பட்டணங்களையும் முற்றுகையிடுவது என்பது புது சிருஷ்டியானது பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு மாம்சத்தின் காரியங்களுக்கு எதிராகவும், மாம்சத்தின் சீரழிவுகள் மற்றும் பலவீனங்களுக்கு எதிராகவும் போரிடுவதைக் குறிக்கிறது. அவரது இளைப்பாறுதலுக்குள் நுழைகிறவர்களுக்கு கர்த்தர் கூறுகிறதாவது: "பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்.''

விசுவாசத்தில் குறைவுபட்டவர்கள் கானானுக்குள் நுழையவேயில்லை, ஆனால் அவர்கள் வனாந்தரத்திலே இறந்துவிட்டார்கள். நாம் வாசிக்கிறதாவது: "இஸ்ரயேலர்கள் தேடுகிறதை அடையாமலிருக்கிறார்கள். தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ அதை அடைந்திருக்கிறார்கள். மற்றவர்கள் இன்றைய தினம் வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்.'' விசுவாசம் உள்ளவர்கள் மட்டுமே தேவனுடைய தெரிந்து கொள்ளப்பட்டவர்களை அமைக்கிறார்கள். இவர்கள் மட்டுமே பழையவைகளிலிருந்து புதிய நிலைமை கடந்து செல்கிறார்கள். இவர்கள் மட்டுமே மரணத்திலிருந்து ஜீவனுக்குள் உண்மையிலேயே மரிக்காமல் செல்லுகிறார்கள். இஸ்ரயேலில் பற்றாக்குறையை சரி செய்வதற்கு இந்த சுவிசேஷ யுகம் முழுவதும் தேவன் சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து அதே போன்ற ஒரு வகுப்பாரை அழைக்கிறார். ஒவ்வொருவரும் விசுவாசத்தை அப்பியாசப்படுத்தவும் யோர்தானைக் கடக்கவும் அழைக்கப்படுகிறார்கள். அதாவது ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க அழைக்கிறார். அது தேவனுக்கு அர்ப்பணம் செய்த வாழ்க்கையாகும், பாவத்திற்கும் அவர்களது சொந்த மாம்சத்தில் வேரூன்றியிருக்கிற பலவீனங்களுக்கும் எதிராக போராடும் வாழ்க்கையாகும்.

"விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்'' என்கிற அப்போஸ்தலரின் வார்த்தைகளை நாம் ஏற்றுக்கொள்ளுகிறோம். தேவனுடைய அர்ப்பணம் செய்த ஜனங்கள் அனைவரும் ஒரு இளைப்பாறுதலை, ஒரு சமாதானத்தை, ஒரு சந்தோஷத்தை ஒரு ஆசீர்வாதத்தை பெறுவதை சாட்சியமளிக்கலாம். உலகம் அதைக் கொடுக்கவோ அல்லது எடுக்கவோ முடியாது. அது அவர்களது விசுவாசத்திற்கும் உண்மைத்தன்மைக்கும் தக்கதாக இருக்கும். எனினும் இவையெல்லாம் போதுமானதல்ல. இன்னும் மேலானவற்றை தேவன் நமக்கு வைத்திருக்கிறார். இதைக்குறித்து அப்போஸ்தலர் அறிவிப்பதாவது: "ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது.'' (எபிரேயர் 4:9)

முதலாம் உயிர்தெழுதலில் பூரணராக்கப்பட்ட புது சிருஷ்டிகள் பரலோக இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பார்கள். அவர்களது விசுவாசமும் உண்மைத்தன்மையும், உலகம், மாம்சம் மற்றும் சத்துருவுக்கு எதிரான நல்ல போராட்டத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் அவர்களுக்கு "ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே'' ஒரு மகிமையான மறுரூபமாக்குதலையும், எல்லா தூதர்கள், துரைத்தனங்கள் மற்றும் வல்லமைகளுக்கும் மேலான தெய்வீக சுபாவத்தின் பரிபூரணத்தில் அவரது சொந்த உயிர்தெழுதலின் ஒரு பங்கையும், மேசியாவின் மகிமையான ராஜ்யத்தில் அவருடனான சுதந்தரத்தையும் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். மேசியாவின் இராஜ்யத்தின் மூலம் உலகத்தின் மனுக்குலம் ஆசீர்வதிக்கப்படும். (லூக்கா 12:3)

## கர்த்தருடைய ஓய்வு

தற்கால தேவனுடைய பிள்ளைகள், அபூரண நிலைமையிலும் அனுபவிக்கிற இளைப்பாறுதல், சமாதானம் மற்றும் தெய்வீக கிருபையை நியாயப்பிரமாண ஓய்வு நாளாகிய ஏழாம் நாள் அடையாளமாக காண்பிக்கிறதாக பரிசுத்த பவுல் அறிவிக்கிறார். ஆனால் நமது உண்மையான இளைப்பாறுதலை நாம் நமது உயிர்த்தெழுதலின் மறுரூபமாகுதலை பெறும் போது அடைவோம். பிறகு பாவத்திலிருந்து ஓய்வை பெறுவோம். ஏனெனில் இவைகளெல்லாம் போய்விடும். புது சிருஷ்டிகள் குறையில்லாதவர்களாக குற்றமற்றவர்களாக, பழி சொல்லமுடியாத ஜீவிகளாக இருப்பார்கள். "பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்.''

இனி மற்றவர்களின் பலவீனம் நமது அமைதியின்மைக்கு காரணமாயிராது. மகிமையடைந்த நிலைமையில் சபையின் இளைப்பாறுதல் பூரணமாக இருக்கும். ஆனால் நாம் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும் முன், ஆண்டவரின் அடிச்சுவட்டில் உண்மையுடன் நடந்து நமக்கு கொடுக்கப்பட்டுள்ள நிலைமைகளின் மீது நித்திய ஜீவனை பற்றிக்கொண்டு விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடி இங்கே நமது தகுதியை காண்பிக்க வேண்டும்.

R5346

## "BECAUSE WE LOVE THE BRETHREN"

# "நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால்"

"நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம் என்று அறிந்திருக்கிறோம்."– 1 யோவான் 3:14

நம்முடைய வாசகர்களில் பெரும்பான்மையானவர்களாகக் காணப்படும் வேதமாணவர்கள் கடந்த சில வருடங்களாக கிருபையில் வளர்ந்து வருகிறார்கள் என்று நம்பிக்கைக் கொள்வதற்கு அநேகம் காரணங்கள் இருக்கின்றன என்பதைத் தனிப்பட்ட விதத்திலும், கடிதங்கள் வாயிலாகவம் அறிந்திருக்கிறோம் என்பதை சாட்சியாக கூறுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். தற்போதுள்ள நிலைமையை மூன்று அல்லது ஆறு அல்லது பத்து வருடங்களுக்கு முன்பிருந்த நிலைமையுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது ஆவிக்குரிய விஷயத்தில், கர்த்தருடைய ஆவியில், அன்பின் பரிசுத்த ஆவியில் மகா அபிவிருத்தியை நாங்கள் காண்கிறோம்.

இது சத்தியத்திற்கடுத்த ஊழியத்தின் செயல்பாடுகளில் மாத்திரம் வெளிப்படாமல், ஒருவருக்கொருவர் மற்றும் கிறிஸ்தவர்கள் அனைவருக்காகவும் மற்றும் தவிக்கும் சர்வ சிருஷ்டிக்காகவும் கொண்டுள்ள பரந்த அளவிலான அனுதாபங்களிலும் கூட வெளிப்படுகின்றதாய் இருக்கிறது. மேலும் "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" என்பதினால், ஏற்ற குணலட்சணத்தினுடைய வளர்ச்சிக்கு அவசியமான அடிகள் மற்றும் சிட்சைகளின் விளைவாக எந்த ஒரு குறைவான ஆசீர்வாதத்தை ஒருவன் பெற்றவனாக இருந்தாலும், ராஜ்யத்தில் பங்கிருக்காது என்பதை நினைவில் கொண்டு கிறிஸ்துவுக்கொத்த சாயலில் ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு வாரமும் மெய்யாகவே வளர்ச்சியடைய வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் குணலட்சணத்தின் விஷயத்தில் தனித்தனியாக நமது கர்த்தரின் சாயலுக்கு ஒத்திருக்க வேண்டும் என்பதே சபையை பற்றிய திவ்விய முன் தீர்மானமாக இருக்கிறது என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளையுங்கூட நாம் நினைவு கூருகின்றோம். (ரோமர் 8:29) நமது அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் தெய்வீக சித்தம் குறித்து இத்தகைய தெளிவான வார்த்தைகளானது, நிச்சயமாகவே நம்மை ஊக்குவிக்கிறதாக இருக்கும்.

இப்படியான வளர்ச்சிகள் எல்லாம் இருக்கின்ற போதிலும், சிறு சபைகள் அநேகவற்றில் உராய்வுகள் ஏற்பட்டு, இதனால் ஏறத்தாழ கவலையையும், மகிழ்ச்சியின்மையையும் உண்டாக்குகின்றது. சத்தியம் நம்மை விடுதலைப்பண்ணி, நம்முடைய அறிவின் கண்களை திறப்பதினால், அது நம்முடைய சொந்த அபூரணங்களையும், சகோதர சகோதரிகளுடைய அபூரணங்களையும் மற்றும் உலகத்தாருடைய அபூரணங்களையும் எப்பொழுதும் இல்லாத அளவுக்கு மிகவும் தெளிவாய் நாம் காண உதவுகின்றது. அதிகமாய் அன்பில்லாவிடில் இப்படி அபூரணங்களைக் காணும் காரியமானது, குற்றம் கண்டுபிடிப்பதற்கும் குறை கூறுவதற்கும் உரிய தன்மைக்கு ஏதுவாகிவிடும்.

இப்படி நம்முடைய சொந்த குணலட்சணங்களை நாம் கையாளும் விஷயத்தில் அதிகப்படியான சுதந்தரத்தை நாம் அனுமதிப்பது பாதுகாப்பானதே,. நன்மைக்கேதுவாய் நாமே நம்மிடத்தில் குற்றங்கண்டுபிடித்து நம்முடைய குறைகளை நாமே நமக்குச் சுட்டிக்காண்பிக்கலாம். எனினும் நம்முடைய அபூரணமான கிரியைகளின்படி இல்லாமல், நம்முடைய இருதய நோக்கத்தின்படியே கர்த்தர் நம்மை நியாயந்தீர்ப்பார் என்னும் அவருடைய கிருபையுள்ள வாக்குத்தத்தத்தை நாம் மறந்து போகுமளவுக்கு, அளவுக்கு மீறியும் நம்மில் நாம் குற்றம் கண்டுபிடிக்கக் கூடாது. அநேகமாக நம்முடைய சொந்த குறைவுகள் குறித்தும் மற்றும் அவைகள் வேண்டுமென்றே செய்யப்படாதவைகள் என்றும் நம்மால் நன்கு உணர்ந்து கொள்ள முடிகின்றது. ஆனால் குறைவுகள் மற்றவர்களுடையதாயிருக்க, அவை நம்முடைய அன்பு, பொறுமை, சகோதர சிநேகம், சாந்தம், தயவு முதலானவற்றைப் பரீட்சிக்கின்றதாய் இருக்கின்றது. எனினும் இம்மாதிரியான பரீட்சைகள் மிகவும் நன்மைக்கேதுவானதாகும். பரிசுத்த ஆவியின் கிருபைகளில் வளர்வதற்குக் கர்த்தர் நமக்கு உதவும்படிக்கு நாம் கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறோம். இந்த வழியில் தேவன் பரீட்சைகள் கொடுப்பதே, நமக்கு உதவுவதற்கான ஒரே வழியாகக் காணப்படுகின்றது என்பதை நாம் நினைவில் கொள்வோமாக. நாம் எந்தளவுக்கு சரியான வழியில் இந்த பரீட்சைகளை ஏற்றுக்கொள்கின்றோமோ, அவ்வளவாய் நமது குணலட்சத்தினுடைய பெலமும், இந்த ஆவியின் கிருபைகளில் நம்முடைய வளர்ச்சியும் இருக்கும்.

### புதுசிருஷ்டிகள் என்ற உறவிற்கான நிரூபணம்

சகோதர சகோதரிகளுக்கான அன்பு என்பது, கிறிஸ்தவனுடைய மிக அருமையான அனுபவங்களில் ஒன்றாயிருக்கின்றது என்று நமது ஆதார வசனம் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஒருவன் தன்னிடத்தில் சகோதர சகோதரிகளுக்கான அன்பும், அவர்களுக்கான அனுதாபமும் முழுமையாக இருக்கிறதாக கண்டால் அவன் ஒரு புதுசிருஷ்டியாக இருக்கின்றான் என்பதற்கும், தான் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்பதற்கும்

வேதவாக்கியத்தின்படியான பலமான நிரூபணமாக இருக்கிறது. ஒருவன் சகோதரர் எவரிடத்திலாகிலும் அன்பிற்குப் பதிலாக வேறேதேனும் உணர்வுகளைப் பெற்றிருப்பானாகில், அவன் தேவனுடன் தனக்குப் புதுச்சிருஷ்டி என்னும் விதத்தில் இருக்கும் தனது உறவிற்கான நிரூபணத்தில் குறைவுபட்டவனாய் நிச்சயம் இருப்பான்.

இதை எப்போதும் நாம் மனதில் வைத்திருப்போமானால், இதன் உதவி நமக்கு எத்துணை மதிப்புமிக்கதாக காணப்படும்! கர்த்தருடைய தயவு குறித்தும் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கும் புதுசிருஷ்டிகளென அவருடனான நம்முடைய உறவு தொடர்ந்து கொண்டிருப்பதைக் குறித்தும் நாம் மறுபடியும் உறுதி செய்ய அடிக்கடி நாம் விரும்புகின்றோமல்லவா? நாம் சரியான நிலைமையில் காணப்படும் பட்சத்தில், ஆதார வசனத்தின் பயன்பாடு சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொண்டு வருகின்றதாய் இருக்கும். ஒருவேளை நாம் தவறான நிலைமையில் இருந்தால் ஆதார வசனமானது புதுச்சிருஷ்டிகளென நம்முடைய சொந்த பாதுகாப்பிற்கான அபாய அறிவிப்பை கொடுக்கிறதாய் இருக்கும்.

அநேகம் சபைகளில் பிரச்சனைகள் ஏற்படும் காரியங்களில் ஒன்று சபையாருக்கும், அதன் ஊழியக்காரர்களுக்கும் இடையிலான உறவின் விஷயமாகும். நம்மால் நிதானிக்க முடிந்தவரையிலும் தவறானது சிலசமயம் (இவர்கள் இருவரில்) ஒருவரிடத்திலும் சில சமயம் மற்றவரிடத்திலும் காணப்படுகிறது. மூப்பர்களுடைய கடமைகள் குறித்தும், சபையாருடைய பொறுப்பு முதலானவைகள் குறித்தும் கேள்விகள் நம்மிடத்தில் அடிக்கடி கேட்கப்படுகின்றது. இத்தகைய கேள்விகள் அனைத்திற்கும், வேதாகம பாடங்களில் ஆறாம் தொகுதியில் இவ்விஷயம் குறித்த நம்முடைய முழுமையான ஆய்வுரையையே பரிந்துரைப்பதற்கு நாம் பொதுவாய் விரும்புகின்றோம். ஆறாம் தொகுதியில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களை இன்னும் அபிவிருத்தி செய்வது எப்படி என்பது நமக்குத் தெரியவில்லை. அத்தொகுதியில் நாங்கள் எழுதியுள்ள காரியங்கள் முழுவதுமாய் ஆராயப்படுமாயின், அதில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகள் ஒவ்வொரு சூழ்நிலைகளுக்கும் போதுமானதாய் காணப்படும் என்று நாம் நம்புகின்றோம்.

உபதேச ரீதியான விஷயங்களில் தனிப்பட்ட விதத்தில் நாம் கடிதம் எழுதுவதை விரும்பவில்லை. ஏனெனில் எங்களிடமிருந்து கடிதங்களைப் பெற்றுக்கொண்டுள்ள நபர்கள், ஒன்றில் காரியங்களைத் தவறாய் புரிந்துகொண்டவர்களாகவோ அல்லது காரியங்களை விவாதிக்கையில் கடிதங்களில் உள்ளவைகளில் ஒரு பகுதியை மாத்திரமே மற்றவர்களுக்கு தெரிவிப்பவர்களாகவோ காணப்பட்டிருந்த சம்பவங்கள் சிலவற்றை நாங்கள் அறிந்திருக்கின்றோம். இன்னுமாக சிலர்: "சகோ, ரசல் அவர்கள் இன்னென்ன விதமாய் வேதாகம பாடங்களினுடைய தொகுதியில் எழுதியிருக்கின்றார்; ஆனால் எங்களிடம் அவர் பிற்காலங்களில் எழுதியுள்ள கடிதத்தில் அவர் வேறு கருத்துக் கொண்டிருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது" என்று கூறியிருக்கின்றனர். ஏதேனும் முக்கியமான சத்தியங்கள் குறித்து எங்களுடைய கண்ணோட்டம் மாறும் பட்சத்தில், அந்த மாற்றத்தை முடிந்தமட்டும் விரைவாக நாம் வாட்ச் டவர் இதழின் வாசகர்கள் அனைவரின் முன்பாகவும் முன் வைத்திடுவோம் என்று அருமையான நண்பர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென நாம் விரும்புகின்றோம். வாட்ச் டவரின் வெளியீட்டில் இம்மாதிரியான மாற்றங்கள் குறித்து குறிப்பிட்டிருப்பதை நீங்கள் காணாதது வரையிலும், எதையும் பொருட்படுத்த வேண்டாம்; வேதாகம பாடங்களினுடைய தொகுதிகளிலுள்ள வார்த்தைகள் ஏதோ அவைகள் நேற்றைய தினம் தான், உங்களுக்கே நேரடியாய் எழுதப்பட்டு உங்களுக்கு வந்தது போன்று மதித்திடுங்கள்.

## சபை நிர்வாக முறைக்கான கொள்கைகள்

கிறிஸ்துவின் சபையை நிர்வகிக்கும் கொள்கைகளைச் சுருக்கமாய் பார்க்கையில் சபை நிர்வாகம் குறித்த விஷயத்தில் கிறிஸ்தவர்கள் மத்தியில் இரண்டு கண்ணோட்டங்கள் நிலவி வருகின்றன: அவை பின்வருமாறு:

1. கிறிஸ்தவ சபை சார்ந்த கண்காணிகளின் ஆட்சி கொள்கை என்னும் (Episcopel view) கண்ணோட்டத்தின்படி, சபையானது கண்காணிகளால் நிர்வகிக்கப்பட்டு நடத்தப்பட வேண்டும். ஏனெனில் இந்த காண்காணிகள் அப்போஸ்தல கண்காணிகள் என்று வலியுறுத்தப்படுகின்றது. அதாவது இவர்கள் அப்போஸ்தலர்களின் வாரிசுகள் என்றும், சபை மற்றும் அதன் காரியங்களை ஒழுங்குப்படுத்துவதற்கென அப்போஸ்தல ஞானமும், ஏவுதலும் மற்றும் அதிகாரமும் வழங்கப்பெற்றவர்கள் என்றும் வலியுறுத்தப்படுகின்றது. இந்தக் கண்ணோட்டத்தை ரோமன் கத்தோலிக்கர்களும், கிரேக்க கத்தோலிக்களும் மற்றும் எபிஸ்கோப்பல் சபையினரும் உடையவர்களாய் இருக்கின்றனர்.

2. மற்றுமொரு கண்ணோட்டம் (Congregationalist) சபையார் ஆட்சி கொள்கையாகும். இது கர்த்தருடைய ஜனங்கள் அடங்கிய ஒவ்வொரு சபை கூட்டமும் ஒரு குழு என்றும், அது அதனை நிர்வகிப்பதற்கும் மற்றும் தெய்வீக வழிநடத்துதலின் கீழ் அதன் நலனுக்கடுத்த காரியங்களை ஒழுங்குபண்ணவும் உரிமை கொண்டிருக்கின்றது என்றும் வலியுறுத்துகின்றது. காங்கிரிகேஷனலிஸ்ட், பேப்டிஸ்ட் மற்றும் இன்னும் சில பிரிவினர்கள் இக்கண்ணோட்டத்தின்படி தாங்கள் நிர்வகிக்கப்படுவதாக கூறுகின்றனர். இன்னுமாக குழப்பத்திலும் மற்றும் உறுதியற்ற நிலையிலும் காணப்படும் சில சபை பிரிவினர், நிர்வகிக்கும் அதிகாரத்தினை ஊழியர்கள் மற்றும் சபை அங்கத்தினர்களுக்கிடையே பங்கிட்டுக் கொள்கின்றனர்.

எபிஸ்கோப்பல் மற்றும் காங்கிரிகேஷனல் என்னும் இரண்டு கொள்கைகளையும் இணைந்து, ஒரு சேர கொண்டிருப்பது வேதாமக ஏற்பாடு என்று நாம் வலியுறுத்துகின்றோம். பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் கண்காணிகளாக இருந்தார்கள். இவர்கள் மட்டுமே தெய்வீக ஏவுதலின் பேரிலான மற்றும்

அதிகாரமுடைய அப்போஸ்தல கண்காணிகளாக இருந்தார்கள் மற்றும் இன்னும் தொடர்ந்து இருக்கிறார்கள் என்று வேதவாக்கியங்கள் போதிக்கின்றன. இவர்களால் பூமியில் கட்டப்படும் எதுவும், கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் கட்டப்பட்டதாக இருக்கும். இவர்களால் கட்டவிழ்க்கப்பட்டதாக அறிவிக்கப்படும் எதுவும், பரலோகத்தின் முன்னிலையில் சபையாரின் மீது கட்டாயமாக்கப்படுவதில்லை. இந்த கண்ணோட்டத்தின்படி அப்போஸ்தல கண்காணிகளென அழைக்கப்பட்டு வரும் மற்ற அனைவரைக் குறித்தும் இயேசுவின் வார்த்தைகள் மிகவும் திட்டவட்டமாய் காணப்படுகின்றது. அப்படிப்பட்டவர்கள் "கள்ள அப்போஸ்தலர்கள் மற்றும் பொய்யரென்று" அவர் குறிப்பிடுகின்றார். அவர்கள் எந்த விதத்திலும் அப்போஸ்தலர்களல்ல. (வெளிப்படுத்துதல் 2:2; 2கொரிந்தியர் 11:13) ஆகையால் தங்களுக்கு அப்போஸ்தல வல்லமை இருக்கின்றது என்றும், தாங்கள் அப்போஸ்தலர்களின் வாரிசுகள் என்றும் எண்ணிக் கொள்ளத்தக்கதாக சாத்தனால் வஞ்சிக்கப்பட்டவர்களாகிய இந்த கண்காணிகளுடைய வலியுறுத்தல்களுக்கு நாம் செவிசாய்க்கவோ அதை எவ்விதத்திலும் அங்கீகரிக்கவோ கூடாது.

தேவனுடைய ஜனங்கள் அதிகாரத்திற்கும், வழிகாட்டுவதற்குமென்று, உண்மையான கண்காணிகளாகிய, ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைப் பெற்றிருப்பதினால் அவர்கள் இப்படியாக ஆயர் நிர்வாகத்தின் அல்லது அப்போஸ்தல கண்காணிகளுடைய நிர்வாகத்தின் கீழ்க் காணப்பட்டாலும் உண்மையில் அவர்களது அமைப்பு சபையை சார்ந்ததேயாகும். கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் அடங்கின ஒவ்வொரு கூட்டத்தாரும் முற்றிலுமாக சுதந்தரமானவர்களாய் இருக்கின்றனர். மேலும் வேதத்திலும், அதிலுள்ள விலையேறப்பெற்ற சகலசத்தியத்திலும் சொந்தமாய் விசுவாசத்தைப் பெற்றிருக்க வேண்டும். எந்த சபையாரும் மற்றும் எந்த தனி நபரும், வேறொரு சபையாரின் அல்லது வேறொரு தனி நபரின் உறுதிமொழிகளினால் கட்டப்பட முடியாது.

ஒன்றாய் செயல்படுவதற்கும், ஒன்று கூடி தொழுது கொள்வதற்கும், தேவனினிமித்தம் ஊழியம் புரிவதற்கும் என்று ஒன்றுகூடி வரும் எக்லீசியா பிரித்தெடுக்கப்பட்டவர்கள், சபை இப்படியாகவே செயல்பட வேண்டும். ஏனெனில் தெய்வீக குணலட்சணம் மற்றும் திட்டம் குறித்ததான அவர்களது பரஸ்பர உணர்ந்து கொள்ளுதலாகும். வேதாகம கண்காணி நிர்வாகமாகிய அப்போஸ்தலரின் போதனைகளின் கீழ் தவிர மற்றபடி யாருடைய அரசாங்கம் அல்லது ஆளுகையில் கீழும் இருப்பதில்லை. ஒவ்வொரு சபையிலுமுள்ள மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் அந்தந்த சபையாரால் வேதாகமத்தின் அறிவுரைகளுக்கேற்ப, தங்கள் மத்தியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட வேண்டும். தெய்வீக நியமனத்தின்படியான பன்னிரண்டு அப்போஸ்தலர்களுடைய அறிவுரைகள் விஷயத்திலும் மற்றும் அப்போஸ்தலரின் அறிவுரைகளுக்கு இசைவாக கூடுவதற்கு உடன்பட்டுள்ள கர்த்தடைய ஜனங்கள் அடங்கின கூட்டத்தார்கள் விஷயத்திலும் தலையிடுவதற்கு, எந்த பூமிக்குரிய வல்லமைக்கும் உரிமையில்லை. இக்கருத்தானது, போப் மார்க்கத்தின் சகல அதிகாரங்களையும் மற்றும் அப்போஸ்தல கண்காணிகளெனப் போலியாய் அழைக்கப்படுபவர்களுடைய சகல அதிகாரங்களையும் ஒரேடியாக ஒழித்து விடுகின்றது.

சகோதர சகோதரிகளுடைய வாக்குகள் மூலமாக உதவிக்காரர்களும், மூப்பர்களும், மேய்ப்பர்களும் போதகர்களும் ஊழியம் மற்றும் கனமிக்க ஸ்தானத்திற்கு உயர்த்தப்படுகிறதினால், இது சபையாரையே அதன் ஊழியக்காரர்களைக் காட்டிலும் மிகுந்த அதிகாரமுடைய நிலைமையில் வைக்கின்றதாய் இருக்கின்றது. ஆனால் அதற்கென்று சபையார் தங்கள் விருப்பங்களைத் திணிப்பதற்கு முற்படாமல், மாறாக வேதாகமத்தில் அப்போஸ்தலர்களால் கொடுக்கப்பட்ட தெய்வீக வழிகாட்டுதலுக்கு இசைவாக உண்மையாய செயல்படுகிறவர்களாக மாத்திரம் காணப்பட வேண்டும். இப்படியாக பார்க்கும் போது இவ்விஷயம் குறித்த தெய்வீக நிலைப்பாட்டின்படியான சத்தியமானது, பல நூற்றாண்டு காலமாகபெருமளவில் கவனிக்கப்படாமல் போய்விட்டபடியால், சபைக்கு அனுகூலமற்ற நிலைமையே நிலவுகின்றது. சிலர் சத்தியத்தின் ஒரு பாகத்தை எடுத்துக்கொண்டும் வேறுசிலர் வேறு பாகத்தை எடுத்துக்கொண்டும் உள்ளனர். முழுமையாய் சத்தியத்தை அங்கீகரிப்பதாக சிலராகிலும் காணப்படுகின்றார்களா என்பதில் ஐயமே. ஆம், உண்மைதான், இந்நிலைமையே கிட்டத்தட்ட ஒவ்வொரு உபதேசத்தின விஷயத்திலும் காணப்படுவதாக நாம் காண்கிறோம்.

விவரங்கள், வேதாகம பாடங்களினுடைய ஆறாம் தொகுதியில் முன் வைக்கப்பட்டிருந்த போதிலும், நாம் மேலே கூறியவைகளிலேயே கொள்கைகள் காணப்படுகின்றன. கொள்கைகள் முழுமையாக கிரகித்துக்கொள்ள முடிகிறவர்களால், விவரங்களையும் புரிந்து கொள்ள முடியும். ஆகையால் வேதவாக்கியங்களும் இசைவாக எந்த ஒரு சிறு சபையாரின் சகல காரியத்திலும் தெளிவாகுவதற்கு சிந்தித்தலும், பொறுமையுடன் கூடிய நிதானமான ஆராய்தலும்தான் காரியமாயுள்ளது. இப்படியாக சபையின் மூப்பர்களாக இருக்கும்படிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கரங்களில் சபையானது சில அதிகாரத்தையும் ஊழியத்தையும் கொடுத்து, மூப்பர்களுக்கு உதவியாய் இருக்கத்தக்கதாக மற்ற சிலரை உதவிக்காரர்களாக சபையானது நியமித்தாலும், மூப்பர்களும், உதவிக்காரர்களுமாகிய இருவரும் சபையாருக்கு, எக்லீசியாவுக்கு எதிலும் பதில் கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர்.

## சபையார் தங்கள் ஊழியக்காரர்களிலும் மேம்பட்டவர்கள்

ஏதேனும் தர்க்கத்தின் சந்தர்ப்பங்களில், சபையாரின் கணிப்பே அல்லது தீர்மானமே அப்போதைக்கு சரியானதென்று காணப்பட வேண்டும். ஆனால் பிற்பாடு அத்தீர்மானம் ஞானமற்றதாக காணப்படும் பட்சத்தில், கணிப்பிலுள்ள தவற்றை நன்மைக்கு ஏதுவாய், அதாவது அறிவுரையாகக் காணப்படும் விதத்தில் கர்த்தரால் மாற்றிவிட முடியும். உதாரணத்திற்கு மூப்பர் அல்லது மூப்பர்களுடைய கருத்திலிருந்து எப்போதேனும் சபையாருடைய கருத்து வேறுபடும் பட்சத்தில் மேல் அதிகாரமாக காணப்படும் சபையாருக்கு, சபைக்கு,

எக்லீசியாவுக்கு மூப்பர்கள் இணங்கிடுவதே சரியான காரியமாய் இருக்கும். நியமிக்கிறவன் நியமிக்கப்படுகிறவனுக்கு மேலானவனாக காணப்படுவதினால், சபையாரே மேல் அதிகாரம் உடையவர்களாக காணப்படுகின்றனர். சபையாருக்கு அல்லது எக்லிசியாவுக்கு நமது கர்த்தருடைய ஏற்பாடானது, "இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கின்றேன்" என்பதேயாகும். கர்த்தர் சபையாரோடு இருப்பதாக வாக்களித்துள்ளார். அவர் எங்கே மூப்பர் இருக்கின்றரோ அங்கே நான் இருப்பேன் என்றும் மூப்பரிடத்திற்குச் சபையார் கூடிக்கொள்ளுங்கள் என்றும் கூறவில்லை. மாறாக அவர் எங்கே சபையார் இருக்கின்றார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்; மற்றும் அவர்கள் மூப்பரை நியமிக்கலாம்; மூப்பர் எவ்வளவாய் அந்த சபையாரை ஆசீர்வதிப்பதில் என்னுடைய ஊழியக்காரனாய் இருப்பதற்குரிய பொருத்தமான பாத்திரமாயிருப்பதற்கு முயற்சிக்கின்றாரோ, அவ்வளவாய் அவரை சபைக்கும், அதன் நலன்களுக்குமான பிரதிநிதியென நான் அங்கீகரித்து ஆசீர்வதிப்பேன் என்று கூறியுள்ளார்.

மூப்பருக்கும், சபையாருக்கும் இடையிலான இந்த உண்மையான உறவைப் பற்றின இந்த புரிந்துகொள்ளுதலானது, பரிசுத்த பவுலால் பரிசுத்த ஆவியின்கனிகள் மற்றும் கிருபைகள் என்று விவரிக்கப்படும் சாந்தம், பொறுமை, சகோதர சிநேகம், நீடிய பொறுமை, நற்குணம், அன்பு முதலானவைகளைத் தங்களுக்குள் அபிவிருத்தி செய்வதற்கு மூப்பர்களுக்கு உதவுகிறதாய் இருக்க வேண்டும். ஆனால் இன்னொரு பக்கத்தில் தங்களுக்கு மூத்த ஒரு சகோதரனாக இருந்து ஊழியம் செய்வதற்கும் மற்றும் தங்களுடைய நலனுக்கடுத்தவைகளை கவனித்துக் கொள்வதற்குமென்று, தங்கள் மத்தியிலிருந்து ஒருவரை தேர்ந்தெடுத்துள்ள சபையார், தாங்கள் கர்த்தருடைய வார்த்தைகள் மற்றும் ஏற்பாடுகளுக்கு இசைவாக ஞானமாய் தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்று நம்பிக்கைக் கொண்டிருக்க வேண்டும். இப்படியாக நம்பிக்கை கொண்டிருக்கையில் அவர்கள் எந்தளவுக்கு தங்கள் மூப்பர் கர்த்தரின் சித்தத்தை அறிவதற்கும் மற்றும் அதை செய்வதற்கும் மற்றும் தனது நேரத்தையும், தாலந்துகளையும் சபையாருக்கான ஊழியங்களில் உண்மையாய் பயன்படுத்திடுவதற்கும் நாடிடுவதை காண்கிறார்களோ, அவ்வளவாய் மூப்பருக்கு ஆதரவையும் உற்சாகத்தையும் கொடுப்பதற்கு ஆயத்தத்துடன் காணப்பட வேண்டும். ஆனால் பிற்பாடோ மூப்பரின் தேர்ந்தெடுத்தல், தொடர்புடையதான அப்போஸ்தலரின அறிவுரைகளை தாங்கள் முழுமையாக புரிந்துகொள்ளவில்லை மற்றும் பின்பற்றவில்லை என்று அறிந்து கொள்ளவார்களானால், இப்படியாக இருப்பினும் அவரை தேர்ந்தெடுத்த தவறு தங்களுடையது என்றும், தவறு அடுத்த தேர்தலிலேயே சரிபண்ணப்பட முடியும் என்றும் நினைவுகூர்ந்து, அடுத்த தேர்தலில கர்த்தருடைய சித்தத்தை தாங்கள் அதிகமாய் அறிந்து கொள்வார்கள் மற்றும் தேர்தலில் ஞானமாய் இருப்பார்கள் என்று நம்பிக்கொண்டும் ஜெபம் பண்ணியும் அந்த மூப்பரிடத்தில் இரக்கத்துடனும் கனிவுடனும் சாந்தத்துடனும் சபையார் இருக்க வேண்டும்.

## சபையாரின் கடமைகள்

இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் போது எத்தனை கூட்டங்கள் நடத்தப்படவேண்டும், எங்கு அவைகள் நடத்தப்பட வேண்டும், யாரால் நடத்தப்பட வேண்டும், எவ்வகையான பாடங்கள் (அல்லது) ஆராய்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் முதலானவைகள் அனைத்தையுமே சபையாரே கூற வேண்டும். சபையின் அங்கத்தினர்களில் ஒருவராக, சக அங்கத்தினர்களுக்கு காணப்படுவது போன்று, மேற்கூறிய விஷயங்களில் தனது கருத்துகளை மூப்பர் சொல்வதற்கு உரிமை கொண்டிருந்த போதிலும் இவைகள் மூப்பரால் தீர்மானம் பண்ணக்கூடிய காரியங்கள் அல்ல. எந்தளவுக்கு அவர் உயர்வாய் மதிக்கப்படுகின்றாரோ, அந்த அளவுக்கு அவரது கருத்துகளுக்கு சபையாரிடத்தில், வகுப்பாரிடத்தில், எக்லீசியாவில் மதிப்புக் காணப்படும்; எனினும் எவ்வளவு தான் மூப்பர் உயர்வாய் மதிக்கப்படுபவராக இருப்பினும், அவர் தங்களது வழிகாட்டியல்ல என்கிற விஷயத்தை சபையார் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. பரிசுத்தமான வேதவாக்கியங்களினுடைய போதனைகள் இந்த மூப்பர்களும், மற்றவர்களும் ஞானமாய் கொடுக்கிறவர்களாய் இருக்கிறார்கள் என்று கண்டுகொள்ளப்படுவதற்கேற்ப, அவர்களுக்கு செவிசாய்க்கப்பட வேண்டும்.

இந்தக் கொள்கையானது கண்டு கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு மற்றும் இவைகளே எதிர்பார்க்கப்பட்டால் சபைகளில் உராய்வுகள் குறைந்த வரும் என்று நாம் நம்புகின்றோம். தங்களுக்குரியதான எல்லையில் காணப்பட்டு மற்றும் அவ்வெல்லைக்கு இசைவாகவே மனசாட்சிக்கு கட்டுப்பட்டு ஊழியம் செய்ய நாடுகின்ற மூப்பர்கள் சபை அங்கத்தினர்கள் மத்தியில் பிரச்சனைகளை ஏற்படுவதற்கு ஏதுவானதும், தங்கள் எல்லைக்குட்பாடததுமான அநேக கரியங்களை செய்விதிலிருந்தும், பேசுவதிலிருந்தும் கட்டுப்படுத்தப் -படுவார்கள்.

## சகல சச்சரவுகளுக்கும் ஒரு முக்கிய காரணி

சபையாரின் சச்சரவுகள் அனைத்திற்கும் பெருமையே முக்கிய காரணியாக காணப்படுகின்றது என்று நாம் நம்புகின்றோம். மூப்பர் தங்களுக்கு செய்ய வேண்டுமென்று சபையார் விரும்புகிறதற்கு அதிகமாகவும் மூப்பருக்கு சபையாரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதற்கு அதிகமாகவும் சபையாருக்கு செய்வதற்கு சில சமயங்களில் மூப்பர் முற்படுகின்றார். அல்லது கிறிஸ்தவ மண்டலம் எங்கும் நிலவும் கருத்துகளினால் தவறாய் வழிகாட்டப்பட்டவராகிய தனது மூப்பத்துவத்தை சபை மீதான அதிகாரத்தின் ஸ்தானம் என்று எண்ணுகிறவராகவும் அது கனமிக்க ஊழியம் என்றும் அதிகாரம் சபையாரிடத்தில் உள்ளது என்றும் எண்ணாதவராகவும் காணப்படுகின்றார். சில சமயங்களில் பிரச்சனை சபையாரிடத்திலுள்ள ஒரு அங்கத்தினனிடத்தில் காணப்படுகின்றது. இந்த அங்கத்தினன் சபையாருடைய உரிமைகளையும், அதிகாரத்தையும் தக்கவைப்பதற்கென நாடுகையில் மிதமிஞ்சி போய் தேவையில்லாமல் மூப்பருக்கு தொல்லைக் கொடுத்து, மூப்பர் சரியான காரியத்தை செய்திருந்தபோதிலும், தான் விரும்பியபடி மூப்பர் செய்யவில்லை என்பதினால் மூப்பரை விமர்சித்துக் கொண்டிருப்பான்.

அன்பானது பொன்னான சட்டத்தை செயல்படுத்த

வேண்டும். நாம் ஒரு வேளை மூப்பருடைய இடத்தில் காணப்பட்டால் நாம் செயல்படுத்துவதற்காக அனுபவிக்க விரும்பும் நியாயமான சுயாதீனத்தை தேவ வார்த்தைகளுக்கு முழு இசைவுடன் காணப்படும் அந்த நியாயமான சுயாதீனத்தை மூப்பருக்கும் கொடுப்பதற்கு நாம் விருப்பமுள்ளவர்களாகக் காணப்படவேண்டும். இன்னுமாக மூப்பர் அந்தந்த சபை கூட்டத்தார் யாவருக்கும் ஊழியக்காரனாய் இருக்கிறாரே ஒழிய, சபையில் விசேஷமாய ஏதோ ஓர் அங்கத்தினனுடைய ஊழியக்காரன் இல்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆகையால் மூப்பருடைய நடத்தைக்குறித்த எந்த விமர்சனமும் சபையாரிடமிருந்து வரவேண்டுமே ஒழிய ஒரு தனிப்பட்ட அங்கத்தினரிடமிருந்து மாத்திரம் வரக்கூடாது. ஒருவேளை ஒரு தனிப்பட்ட அங்கத்தினன் ஏதேனும் முக்கியமான கருத்தைக் கொண்டிருந்து, அதைமூப்பர் பொருட்படுத்தவில்லையெனில், இவ்விஷயம் தொடர்பாக தனக்கு அறிவுரையாகக் காணப்படுவதற்கு ஏதுவாகவும், இது விஷயம் குறித்த சபையாருடைய கருத்தை கேட்பதற்கு அந்த அங்கத்தினன் உரிமை உடையவனாய் இருக்கின்றான். ஆனால் எந்தத்தனிப்பட்ட அங்கத்தினனும் மூப்பரைக் குறித்து விமர்சிப்பதற்கோ அல்லது அவரது வழி முறைகளில் குற்றம் கண்டுபிடிப்பதற்கோ முற்படக்கூடாது.

ஒருவேளை இது விஷயத்தில் சபையார் மூப்பரை அங்கீகரிப்பார்களானால், மாற்றுக்கருத்துக் கொண்டிருக்கும் அந்த தனிப்பட்ட அங்கத்தினர்கள் தொடர்ந்து தாங்கள் விரும்புகிறபடியே எண்ணிக்கொள்ள சுயாதீனமுடையவர்களாய் இருக்கின்றனர். எனினும் அவர்கள் பெரும்பான்மையானவர்களுடைய கருத்திற்கு விட்டுக்கொடுக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் சபையார் மத்தியில் சமாதானம், ஒழுங்கு என்பவைகளை வளர்த்திக்கொள்வது என்பது, வேதாகம ஆராய்ச்சிகளின் விஷயத்தில் மிகவும் மதிப்புமிக்க காரியங்களாய் காணப்படுகின்றன. ஒரு விஷயத்தில் உண்மையிலேயே தவறு இருந்தால், அது வேதவாக்கியங்களுக்கு முரண்பாடாய் இருந்தால் ஒழிய, மற்றப்படி சமாதானத்தையும் ஒழுங்கையும் குலைத்துப்போடும் எதுவும் செய்யப்படக்கூடாது. வேதவாக்கியங்களுக்கு முரண்பட்டதென, தான் கருதும் காரியங்களை கவனத்திற்கு கொண்டு வரும் சகோதரனோ அல்லது சகோதரியோ தனது சொந்த கருத்தை குறித்து அதிகமாய் சொல்லாமல், மீறப்பட்டுள்ளதாக, தான் நம்புகின்ற வேதவாக்கியங்களின் கட்டளைகளையே பிரதானமாய் கையாளவேண்டும்.

### "சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது"

இந்தப்பத்திரிக்கை செல்லும் இடங்களிலெல்லாம் இந்த யோசனைகளானது கர்த்தருடைய சகோதர சகோதரிகள் மத்தியில் சமாதானத்தையும் ஒற்றுமையையும் வர்த்திக்கப்பண்ண வேண்டும் என்ற நோக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரே ஆவியினால், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரும் சரியானவைகளை தேவனுக்கு பிரியமாயும் அவரால் அங்கீகரிக்கப்படுகிறதாயும் மற்றும் அவரது நோக்கங்களுக்கடுத்தவைகளாயும் உள்ளவைகளை அறியவும் செய்யவும் விரும்புகின்றார்கள் என்ற நம்பிக்கையை நாம் கொண்டிருக்கின்றோம். "ஒரே ஆவியினால் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு இருக்கின்றோம்." "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல." நாம் அனைவருமே கர்த்தருடன் ஒன்றுபட்டுள்ளதால், ஒரே இருதயம், ஒரே சித்தம் உடையவர்களாகியுள்ளதால், நம்முடைய பிரச்சனை முழுக்க நம்முடைய தலைகளிலேயே, திவ்விய ஏற்பாடுகளை நிர்வகிக்கும் கொள்கைகள் சிலவற்றை நாம் தவறாய் புரிந்துகொண்டுள்ளதிலேயே காணப்படுகின்றது என்பது நம்முடைய கருத்தாய் இருக்கின்றது. இந்த கொள்கையானது பூரணமானவைகள், சரியானவைகள் என்பதில் நாம் உறுதியாயிருக்கிறோம். இந்த கொள்கைகளுக்கு இசைவாக நாம் வளரக்கூடிய அளவுக்குத்தக்கதாக நாம் ஒருவரோடொருவர் சமாதானமாக இருப்போம்; நமது கர்த்தருடன் பங்கு பெறப்போகிற ராஜ்யத்திற்கு ஒருவருக்கொருவர் சந்தோஷத்துடன் வழிநடத்த உதவ முடியும்.

சகல சகோதரர்களிடமும் நாம் செலுத்துகிற அன்பு, நாம் புது சிருஷ்டியாக அன்பு செலுத்துகிறோம் என்பதின் ஒரு நிச்சயமான அறிகுறியாக இருக்கிறது என்பதை நாம் தொடர்ந்து நினைவில் கொள்வோம். சகோதரர்களிடத்தில் அன்பு என்பது அவர்களுக்கு தீமை செய்யாதிருப்பதும், அவசியம் ஏற்பாட்டால் ஒழிய தீமையானவைகளை பேசாதிருப்பதும் ஆகும். இறுதியாக அவர்களது வார்த்தைகள் மற்றும் கிரியைகள் குறித்து தீமையாக பேச நினையாதிருப்பதும் ஆகும். "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது." "அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவனும்அவனில் (தமது ஆவியின் மூலம்) நிலைத்திருக்கிறார்." நமக்குண்டான யாவற்றையும் நாம் அன்னதானம் பண்ணினாலும், நமது சரீரத்தை நீதியின் காரியங்களுக்காக சுட்டெரிக்கப்படுவதற்கு கொடுத்தாலும் அன்பு இராவிட்டால், அன்பின் ஆவிஇராவிட்டால் தேவனுடைய பார்வையில் நாம் ஒன்றுமில்லை.. (ரோமர் 13:10; 1யோவான் 4:16; 1கொரிந்தியர் 13:3)

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ. C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர் :

சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை
எண். 22, முதல் தெரு,ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை-600 019.
கைபேசி : 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com
Website : www.thestudiesinthescriptures.com

**FOR PRIVATE CIRCULATION ONLY**